வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu
ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 08.06.2023 வியாழக்கிழமை | இதழ் : 181 | பக்கங்கள் : 16

# காலை கொழும்பில் கைதான கஜேந்திரகுமார் மாலை கிளிநொச்சியில் பிணையில் விடுவிப்பு

**கிளிநொச்சி, ஜூன் 08**

**கொழும்பில் கைதுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் எம்.பி. நேற்று பிணையில் விடு விக்கப்பட்டார். 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் செல்ல அவருக்கு கிளிநொச்சி நீதிவான் நீதி மன்றம் அனுமதி அளித்தது.**

தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியின் தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் நேற்றுப் புதன்கிழமை காலை கொழும்பு - கொள்ளுப்பிட் டியிலுள்ள அவரின் இல்லத் தில் வைத்துக் கைது செய் யப்பட்டார்.

அங்கிருந்து கிளிநொச்சி பொலிஸ் நிலை யத்துக்கு நேற்று மாலை 5.30 மணி யளவில் அழைத்துவரப் பட்ட அவரிடம் பொலிஸார் வாக்குமூலம் பெற்றனர். இதன் பின்னர், அவர் கிளி நொச்சி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இதன் போதே அவரை பிணையில் செல்ல நீதிவான் அனுமதி அளித்தார்.

இதேநேரம்,

15



## சர்வதேச விசாரணையின் தேவையை எனது கைது எடுத்துக்காட்டுகின்றது!

### பிணையில் வெளிவந்த கஜேந்திரகுமார்

கிளிநொச்சி, ஜூன் 08

சர்வதேச விசாரணை பொறிமுறை மூலம்தான் தமிழர்களுக்கான தீர்வை பெற்றுக் கொள்ள முடி யும் என்பதை எனது கைது எடுத்துக்காட்டுகின்றது- இவ்வாறு நேற்று பொலி ஸாரால் கைது செய்யப் பட்டு பிணையில் விடு விக்கப்பட்ட கஜேந்திர குமார் பொன்னம்பலம் எம். பி. தெரிவித்தார்.

மருதங்கேணி பொலி ஸாரின் கடமைக்கு இடை யூறு ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட கஜேந்திரகுமார் எம். பி. நேற்று கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில்

15

## தமிழரசு, கூட்டமைப்பினரை ஜனாதிபதி இன்று சந்திக்கிறார்

கொழும்பு, ஜூன் 08

இலங்கை தமிழரசு கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளு மன்ற உறுப்பினர்களை இன்று வியாழக்கிழமை மாலை ஜனாதிபதி சந்திப் புக்கு அழைத்துள்ளார்.

நேற்று புதன்கிழமை மதியமே இந்த சந்திப் யபுக்கு அழைப்பு விடுக் கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

இதன்படி, இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இந்த சந்திப்பு நடைபெறவுள் ளது.

கடந்த காலங்களில் நடந்த ஜனாதிபதி - தமிழ் தேசிய கட்சிகளின் எம்.பிக்களின் சந்திப் புகளின் போது

15

## 300 பொருட்கள் மீதான தடை இவ்வார இறுதியில் நீங்கும்!

### நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஜூன் 08

300 பொருட்கள் மீதான இறக்குமதி தடை, இந்த வார இறுதியில் நீக்கப் படும் என்று பாராளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு நேற்று உரை யாற்றும் போது நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதன்மூலம், இறக்குமதிக்கு கட்டுப்பாடு

15

## நெடுந்தீவு சென்ற படகு விபத்து; 38 பயணிகள் பாதுகாப்பாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 08

நெடுந்தீவுக்கு சென்ற படகு இறங்கு துறைக்கு அருகே விபத்துக்கு உள்ளானது. இதன்போது, 38 பயணிகளை கடற்படை யினர் பாதுகாப்பாக மீட்டனர்.

நேற்று புதன்கிழமை காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறிகாட்டுவான் இறங்கு

15



## டெங்கு நோயாளர் 41581ஆக உயர்வு!

கொழும்பு, ஜூன் 08

நாட்டில் இதுவரை யான காலப்பகுதிக்குள் 41,581 டெங்கு நோயா ளர்கள் இனங்காணப்பட் டுள்ளதோடு, 25 மரணங் களும் பதிவாகியுள்ளன.

மழை காலநிலை யுடன் இந்த எண் ணிக்கை சடுதியாக

15



## கஜேந்திரகுமார் கைதுக்கு நன்றி

கொழும்பு, ஜூன் 08

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவ ரும் பாராளுமன்ற உறுப் பினருமான கஜேந்திர குமாரை கைது செய்த மைக்கு நன்றி தெரிவித் துள்ளார் பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன் பில எம். பி.

நேற்று செய்தியாளர் களை சந்தித்த அவர்,

வடக்கு, தெற்கில் சில பாராளுமன்ற உறுப்பினர்கள்

15

## மாகாண இடைக்கால நிர்வாகம் பிரதமர் - விக்னேஸ்வரன் பேசுவர்

கொழும்பு, ஜூன் 08

வடக்கு, கிழக்கு மாகா ணங்களுக்கான இடைக் கால நிர்வாக சபை அமைக்கப்பட்டு, பறிக் கப்பட்ட மாகாண அதி காரங்களை மீள வழங்கு வது தொடர்பில் தயாரிக் கப்பட்ட வரைவு தொடர் பாக இன்று வியாழக் கிழமை கலந்துரையாடப் பட வுள்ளது.

பிரதமர் தினேஷ் குண வர்த்தன தலைமையி லான அணியும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன்,

15

## பொலிஸாரின் கடமைகளில் இடையூறு ஏற்படுத்த முடியாது

### கஜேந்திரகுமார் விடயத்தில் சபாநாயகர்

கொழும்பு, ஜூன் 08

பாராளுமன்ற உறுப்பி னர் கஜேந்திரகுமார் கைது விடயத்தில், பொலிஸா ரின் கடமையில் குறுக்கீடு செய்ய முடியாது என்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாஸ, கஜேந்திரகுமார் பொன் னம்பலம் எம்.பி., பாராளு மன்றத்துக்கு வருகை தந்துகொண்டிருந்த போது இன்று (நேற்று) காலை

15

## பல்கலை. மாணவர் ஆர்ப்பாட்டம்மீது கண்ணீர் குண்டு, நீர் தாரை பிரயோகம்!

### பதிலுக்கு மாணவர்கள் கல்வீச்சு

கொழும்பு, ஜூன் 08

அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் கண்ணீர் புகைக்குண்டுகள் வீசப் பட்டும், நீர்த் தாரை பிரயோகம் செய்தும் கலைக்கப்பட்டது. பதிலுக்கு மாணவர் களும் பொலிஸார் மீது கற்களை

15



## "சிங்கள வாக்குக்காகவே கஜேந்திரகுமார் கைது!"

கொழும்பு, ஜூன் 08

சிங்கள - பௌத்த மக்களிடம் வடக்கின் தமிழ் பிரதிநிதியொரு வரை கைது செய்துவிட் டோம் எனக் காண்பிக்க முயற்சிக்கிறது. இது தேர்தலை இலக்காகக் கொண்டு அரங்கேற்றப் படும் நாடகமாகும் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துநில் குறிப்பிட் டார்.

எதிர்க்கட்சி

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# கஜேந்திரகுமார் கைதை கண்டித்து வாயைக் கட்டியவாறு போராட்டம்!

கிளிநொச்சி, ஜூன் 08

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கைதைக் கண்டித்து கிளிநொச்சி பொலிஸ் நிலையம் முன்பாக வாயில் கறுப்பு துணி கட்டி கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் நேற்று பிற்பகல் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரை பொலிஸ் நிலையத்தில் வைத்திருந்த சமயமே அவரின் கட்சி ஆதரவாளர்கள், செயல்பாட்டாளர்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





# உள்ளூராட்சி சபைகள் தேர்தலை இனியும் ஒத்திவைக்க முடியாது!

## சம்பிக்க ரணவக்க எம். பி.

கொழும்பு, ஜூன் 08

நிதி இல்லை என்ற பொய்யான அறிவிப்பைக்கூறி இனி மேலும் உள்ளூராட்சி தேர்தலை இனியும் ஒத்திவைக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலத்தில் அரச நிகழ்வுகளுக்கு ஒதுக்கப்பட்ட செலவீனங்கள், நிதி ஒரு பிரச்னையாக இல்லை என்பதையே காட்டுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேநேரம் உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர்களை மேற்பார்வையிட நியமித்துள்ள நடவடிக்கைக்கு அவர் கண்டனமும் தெரிவித்துள்ளார்.

ஜூலை மாதத்துக்குப் பிறகு தேர்தல் நடத்தப்பட வேண்டுமானால், வாக்காளர் பதிவேடுகளைத் திருத்துவதற்கு முன்பாக உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் சம்பிக்க வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# கஜேந்திரகுமாரின் சிறப்புரிமை மீறல் கட்சிபேதமின்றி கண்டனத்துக்குரியது

## சாணக்கியன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 08

கட்சி பேதம் பாராமல் கஜேந்திரகுமாரின் சிறப்புரிமை மீறப்பட்டமைக்கு எதிராக நாம் அனைவரும் குரல் கொடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டமை குறித்து நேற்று பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், ஒட்டுமொத்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நேர்ந்த ஒரு தவறான செயல்பாடாகவே இவ்விடயம் கருதப்படுகின்றது. பாராளுமன்றுக்கு வருகைத் தந்து, உரையாற்றிவிட்டு நீதிமன்றில் முன்னிலையாவதாக அவர் கூறிய நிலையிலேயே இன்று (நேற்று) அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த காலங்களில் கொலை குற்றத்திற்காக நீதிமன்றில் தண்டனை பெற்ற பிரேமலால் ஜயசேகர பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொண்டிருந்தார். ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலைக் குற்றத்துக்காக தண்டனை அனுபவித்த சிவநேசதுரை சந்திரகாந்தன், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு சிறையில் இருக்கும்போதுகூட வருகை தந்தார். இவ்வாறான பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

ஆனால், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு இன்று (நேற்று) பாராளுமன்றுக்கு வருகை தருவதற்கான உரிமை மறுக்கப்பட்டுள்ளது. எனினும், கட்சி பேதம் பாராமல் அவரது சிறப்புரிமை மீறப்பட்டமைக்கு எதிராக நாம் அனைவரும் குரல் கொடுக்க வேண்டும்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொலிஸாரைப் பார்த்து அடையாளத்தை உறுதிப்படுத்துமாறு கூறுவது நியாயமான ஒன்றாகும்.

ஏனெனில், அவரது தந்தையார் இரண்டு பொலிஸாரால்தான் கொழும்பில் வைத்து துப்பாக்கியால் சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். எனவே, தன்னை பின் தொடர்ந்து பொலிஸார் வருவது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு சந்தேகம் எழுவதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

அத்தோடு, பாராளுமன்றுக்கு வருகை தந்து உரையாற்றிவிட்டு நீதிமன்றில் முன்னிலையாகுமாறு சபாநாயகர் அறிவித்திருக்க வேண்டும். அனைத்து உறுப்பினர்களும் இதற்கெதிராக குரல் கொடுத்திருக்க வேண்டும். நாம் இந்த சம்பவத்தை வன்மையாக கண்டிக்கிறோம் - என்றார். (ஐ- 6)

# வயோதிப பெண்ணின் கழுத்தில் சுருக்கிட்டு நகைகள் அபகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 08

வயலில் கட்டியிருந்த மாட்டை அவிழ்க்க சென்ற வயோதிப பெண்ணின் கழுத்தில் சுருக்கிட்டு அவரின் தங்க நகைகள் அபகரிக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் வடமராட்சி - துன்னாலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

அது தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

வயலில் கட்டப்பட்டிருந்த மாட்டை அவிழ்க்க சென்ற பெண்ணை பின் தொடர்ந்து சென்ற கொள்ளையன் வயலுக்கு அருகில் வயோதிப பெண்ணின் கழுத்தில் சுருக்கு கயிறை மாட்டி இழுத்துள்ளார். அதனால் வயோதிப பெண் மயக்கமடைந்துள்ளார். இதையடுத்து, அவரின் நகைகளை அபகரித்து சென்றுள்ளான்.

மயக்கம் தெளிந்த பின்னரே தனது நகைகள் அபகரிக்கப்பட்டது தெரிய வந்தது. இது தொடர்பில், அவர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ)

# பொருளாதார சவாலை முறியடிக்க இலங்கைக்கு அமெரிக்கா உதவும்!

கொழும்பு, ஜூன் 08

இலங்கை முகங்கொடுத்திருக்கும் பொருளாதார ரீதியான சவால்களை முறியடிப்பதற்கும், கட்டமைப்பு ரீதியிலான மறுசீரமைப்புக்களைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கும் அமெரிக்கா தொடர்ந்து ஒத்துழைப்பை வழங்குமென அமெரிக்க திறைசேரியின் ஆசியாவுக்கான பிரதி உதவிச்செயலாளர் ரொபர்ட் கப்ரொத் உறுதியளித்துள்ளார்.

இதன்போது, இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் மறுசீரமைப்புக்களை மேலும் ஆழப்படுத்துவதற்கும், நிலைபேறான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் அவசியமான ஒத்துழைப்புக்களை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற சர்வதேச பொதுக்கட்டமைப்புக்களின் அதிகாரிகளையும் அமெரிக்க திறைசேரியின் ஆசியாவுக்கான பிரதி உதவிச்செயலாளர் ரொபர்ட் கப்ரொத் சந்தித்துக் கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது.

# செஞ்சிலுவை, செம்பிறை சங்கங்களின் தலைவர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 08

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சர்வதேச செஞ்சிலுவை சங்கம், செம்பிறை சங்க சம்மேளனம் ஆகியவற்றின் தலைவர்கள் நேற்று சந்தித்தனர்.

கொழும்பில் நடைபெற்ற சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்க சம்மேளனத்தின் தலைவர்களுக்கான மாநாடு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தெளிவுபடுத்தும் நோக்கிலேயே இந்த சந்திப்பு நடைபெற்றது.



இந்த மாநாட்டில் தெற்காசியாவிற்கான உலக அனர்த்த அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டதோடு அதன் பிரதியும் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் மற்றும் செம்பிறை சங்க சம்மேளன சர்வதேச செயல்பாடு தொடர்பான அறிக்கையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

இலங்கையில் செஞ்சிலுவை சங்கத்தின் சட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பிலும் மேற்படி பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தனர்.

சட்டம் அமுலாக்கப்படுவதால் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தை மேலும் பலப்படுத்திக்கொள்ள முடியும். அத்துடன், பாதிக்கப்படக்கூடிய மக்களுக்காக சேவைகளை செயற்திறன் மிக்கதாக முன்னெடுக்க முடியும் என்றும் வலியுறுத்தினர்.

இது தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கை செஞ்சிலுவை சங்கத்தை பலப்படுத்துவதற்கும் அதனூடாக மக்களுக்கு கிடைக்கப்பெறும் நலன்களை ஊக்குவிப்பதற்கும் அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதாக உறுதியளித்தார்.

மனிதானிமான நடவடிக்கைகளில் இலங்கை, சர்வதேச அமைப்புகளுடன் இணங்கிச் செயல்படும் எனவும் ஜனாதிபதி உறுதியளித்தார். (ஐ)

# வீதியில் சாகசம் காட்டிய இளைஞருக்கு மறியல்!

யாழ்ப்பாணம், ஜூன் 08

போக்குவரத்து நிறைந்த வீதியில் மோட்டார் சைக்கிளில் சாகசம் காட்டிய இளைஞனை மல்லாகம் நீதிவான் நீதிமன்று விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது.

மானிப்பாய் பகுதியில் கடந்த திங்கட்கிழமை சன நடமாட்டம் அதிகமான நேரத்தில் போக்குவரத்து நெரிசல்கள் காணப்பட்ட நிலையில் வீதியில் வேகமாக மோட்டார் சைக்கிளை செலுத்தி, சாகசம் காட்டிய இளைஞர், வீதியில் போத்தல் ஒன்றையும் உடைத்துள்ளார்.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து , சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சாகசத்தில் ஈடுபட்ட சண்டிலிப்பாயை சேர்ந்த 20 வயதான இளைஞனை கைது செய்தனர்

கைது செய்யப்பட்ட இளைஞனை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இதன்போது அவரை நாளை வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

Eelanadu 08.06.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 25

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஜனாதிபதிக்கான தகுதி?

ஐக்கிய மக்கள் குடியரசு கட்சியின் தலைவர் சம்பிக்க ரணவக்க, தனக்கு ஜனாதிபதியாக வருவதற்கான தகுதியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கின்றார். நாடு ஜனாதிபதி தேர்தலொன்றை எதிர்கொள்ளவுள்ள நிலையில், யாருக்கெல்லாம் வேட்பாளராவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன - என்னும் கேள்வி இப்போதே எழத்தொடங்கிவிட்டது. ஜனாதிபதிக்கான போட்டி என்பது அடிப்படையில் நபர்களுக்கு இடையிலான போட்டிதான். பலமான கட்சி பின்னணி தேவைப்பட்டாலும்கூட, போட்டியிடவுள்ள தனிநபர்கள் தொடர்பான மக்கள் அபிப்பிராயம் முக்கியமானது. கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது, கோட்டாபய ராஜபக்ஷ தொடர்பில் சிங்கள மக்கள் மத்தியில் முற்றிலும் சாதகமானதோர் அபிப்பிராயம் நிலவியிருந்தது. அதற்கு பல காரணங்களும் இருந்தன. ஒன்று, கோட்டாபயவுக்கு ஆதரவான வியத்மக அமைப்பு மத்திய தரவர்க்க மக்கள் மத்தியில் கோட்டாபய ராஜபக்ஷ தொடர்பில் சாதகமான அபிப்பிராயங்களை ஏற்படுத்தியிருந்தது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் வெற்றியையும் இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்பால் முன்னெடுக்கப்பட்ட ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கு பின்னரான சூழலையும் அவர்கள் கச்சிதமாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றி நன்கு திட்டமிட்ட வகையில் இடம்பெற்றது. இதற்காக இரண்டு வருடங்களுக்கு முன்னரே பல்வேறு குழுக்கள் திறம்பட செயலாற்றியிருந்தன. குறிப்பாக, பௌத்த ஆலயங்கள் அனைத்திலும் குறிப்பிட்ட நேரம் இஸ்லாமிய பயங்கரவாதத்தின் ஆபத்துகள் குறித்த பிரசாரங்களுக்கு பயன்படுத்தப்பட்டன. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் கோட்டாபய ராஜபக்ஷ தனிச்சிங்கள வாக்கில் வெற்றிபெற முடிந்தது. அவர் எவ்வளவு வேகமாக செல்வாக்கின் உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டாரோ, அதேயளவு வேகமாகவே அறகலய என்னும் சிங்கள கிளர்ச்சியின் மூலம் வீழ்த்தவும்பட்டார்.

தற்போதுள்ள சூழல் முற்றிலும் வேறுபட்டது. சிங்கள கிளர்ச்சியின் மூலம் ஒரு ஜனாதிபதி பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கின்றார். அறகலய ஊடாக பதவிக்கு வந்தவரான ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாவதற்கான திட்டங்களை வகுக்கின்றார். இந்த நிலையில், ஏனையவர்களும் குறிப்பாக சஜித் பிரேமதாஸ மற்றும் சம்பிக்க ரணவக்க போன்றவர்களும் வேட்பாளருக்கான தகுதிநிலையுடன் தங்களை அடையாளப்படுத்த முயற்சிக்கின்றனர். தற்போதுள்ள சூழலில், ரணில் விக்கிரமசிங்கவின் அனுபவம் மற்றும் அவருக்குள்ள சர்வதேச தொடர்புகள் மட்டுமே அவருக்கு சாதகமாக இருக்கின்றன. இதேவேளை சம்பிக்க போன்ற ஒருவரை பொதுவேட்பாளராக்கி அவருக்கு ஏனையவர்கள் அனைவரும் ஆதரவு வழங்குவார்களாக இருந்தால் ரணிலின் திட்டங்கள் தோல்வியடையலாம்.

அவ்வாறானதொரு சூழல் ஏற்படுவதை எவ்வாறாயினும் தடுக்கவே ரணில் முயற்சிக்கக்கூடும். எனினும், நாடு பொருளாதார ரீதியில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய நிலையில் முன்னேற்றத்தை இதுவரையில் பதிவுசெய்யவில்லை. டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்திருந்தாலும்கூட, இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்போது மீண்டும் ஒரு பொருளாதார முடக்கம் ஒன்று ஏற்படலாம் என்றும் நிபுணர்கள் எச்சரிகின்றனர். இறக்குமதியை தொடர்ந்தும் சுருக்குவதன் ஊடாகவும் நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்ல முடியாது. இதனை ரணில் எவ்வாறு சமாளிக்கப் போகின்றார் - என்பதில்தான் அவர்மீதான அபிப்பிராயம் தங்கியிருக்கின்றது. ஆனால், வேறு எவரும் நாட்டை முன்னெடுப்பதற்கு இல்லாத நிலையில்தான் ரணில் நாட்டை முன்கொண்டு செல்லும் பணியை பொறுப்பேற்றார். எனினும், பொறுப்பை ஏற்றுக்கொண்டவர் அதனை தொடர்ந்தும் மக்களுக்கு சாதகமாகக் கொண்டு சென்றால் மட்டும்தான் ரணிலால் வெற்றியை அறுவடை செய்ய முடியும்.

# சிறப்பு சொற்பொழிவும் நாயன்மார் குருபூசையும்

யாழ்ப்பாணம், ஜூன் 08

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், சிவ சிறீ பால. திருகுணானந்தக் குருக்கள் நடத்தும் வாராந்த பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவும் நாயன்மார் குருபூசை தொடர் 02 - திருநாவுக்கரசர் சுவாமிகள் குருபூசை விழாவும் சாவல்கட்டு - அந்திக்குழி ஞான வைரவர் காளி அம்பாள் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்து கொள்வார்.

சேக்கிழார் பெருமான் , திருநாவுக்கரசர் குருபூசையை தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்வுகள் நடைபெறும். தொடர்ந்து 'என் கடன்பணி செய்து கிடப்பதே' என்னும் விடயப்பொருளில் இளம் சைவப்புலவர் ச. நவநீதன் சொற்பொழிவாற்றுவார்.

இதன்போது, மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். ஆன்மீக விருந்தினர் உரையைத் தொடர்ந்து குருபூசையை முன்னிட்டு மாணவர்களிடம் நடத்தப்பட்ட வினாடி வினா போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

# சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 08

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் நடக்கும் வாராந்த சுக்கிரவாரச் சிறப்புச்சொற்பொழிவு சண்முக விலாச மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கத்தின் தலைமையுரையை தொடர்ந்து சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர் சி. கா. கமலநாதன் 'ஜெப மாலை தந்த சற்குருநாதா' என்னும் விடயப்பொருளில் ஆற்றுவார்.

நிறைவில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். (ஐ)

# கஜேந்திரகுமார் எம். பி. கைது மணிவண்ணனும் கண்டனம்!

யாழ்ப்பாணம், ஜூன் 08

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கைதை யாழ். மாநகர முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன் கண்டித்துள்ளார்.

கஜேந்திரகுமார் எம். பி. நேற்று காலை கொழும்பில் உள்ள அவரின் இல்லத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். இந்த நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டமை ஏற்றுக்கொள்ள முடியாதது. உடனடியாக அவர் விடுதலை செய்யப்பட வேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# பெரியபுராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 08

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் சிவசிறீ பால. திருகுணானந்தக் குருக்கள் நடத்தும் வாராந்த பெரிய புராண சிறப்பு சொற்பொழிவுத் தொடர் 09 ( திருநீலகண்ட நாயனார் ) புத்தூர் கிழக்கு கருப்பை ஈஸ்வரன் - ஜெகதாம்பிகை சமேத வேதபுரீஸ்வரர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்குச் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் சேக்கிழார் பெருமானின் குருபூசையைத் தொடர்ந்து சொற்பொழிவை சைவப் புலவர் ச. நவநீதன் 'சிவனடியார்களுக்கு திருவோடு அளிக்கும் நாயனார்' என்னும் விடயப்பொருளில் ஆற்றுவார். (ஐ)

# யோகக்கலை கற்கைநெறியின் புதிய பிரிவு சனியன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 08


வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6.00 மணி முதல் 8.00 மணிவரை நடைபெறும் இந்த வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இரு பாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும்.

சுமார் மூன்று மாத காலத்தைக் கொண்டமைந்த இந்த அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜூன் - 08 வியாழக்கிழமை
சோபகிருது வருடம் - வைகாசி 25
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : பஞ்சமி




**மேடம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். புதிய நிர்வாக திறமை வெளிப்படும். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும் நாள்.

**இடபம்**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். வியாபாரம் சூடு பிடிக்கும். தலைமையின் ஆதரவு கிடைக்கும். தேவைகள் பூர்த்தி ஆகும் நாள்.

**மிதுனம்**
இன்று சந்திராஷ்டமம் நீடிப்பதால் தன்னம்பிக்கை குறையும். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் அதிகாரிகள் குறை கூறுவார்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**கடகம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். எதிர்பார்த்த வேலைகள் முடியும் நாள்.

**சிம்மம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர் நண்பர்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பீர்கள். உங்களின் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**கன்னி**
குடும்பத்தினருடன் உங்கள் நேரத்தை செலவழிப்பீர்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். நல்லது நடக்கும் நாள்.

**துலாம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. வாகன வசதிப் பெருகும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பூர்வீக சொத்துப் பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளுக்கு நீங்கள் நெருக்கமாவீர்கள். நீங்கள் நினைத்ததை முடிக்கும் நாள்.

**தனுசு**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதிய மாற்றங்கள் ஏற்படும் நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
கணவன் - மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வாகனத்தில் கவனம் தேவை. உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மீனம்**
உங்களுடைய ஆலோசனைகளை எல்லோரும் ஏற்கும்படி இருக்கும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். நல்லது நடக்கும் நாள்.

# தனுஷ்கோடி - தலைமன்னார் கப்பல் சேவை ஆரம்பமாகுமா?

*இராமேஸ்வரம், ஜூன் 08*

தனுஷ்கோடி - தலைமன்னார் இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து 1914. 02. 24இல் தொடங்கப்பட்டது.

பிரித்தானியாவிடம் இருந்து இரு நாடுகளம் சுதந்திரம் அடைந்த பின்னரும் போக்குவரத்து தொடர்ந்தது. 22.12.1964இல் தனுஷ்கோடி புயலில் அழிந்த பிறகு, 1965ஆம் ஆண்டிலிருந்து ராமேசுவரம் - தலைமன்னார் இடையே ஒருநாள் விட்டு ஒரு நாள் என வாரத்துக்கு மூன்று நாட்கள் கப்பல் போக்குவரத்து தொடங்கியது. 'ராமானுஜம்' என்ற பெயரிடப்பட்ட இந்த பயணிகள் கப்பலில் அதிகபட்சமாக 400 பேர் வரை பயணம் செய்தனர்.

இந்தக் கப்பல் போக்குவரத்து மூலம் வணிகர்கள் பல்வேறு வகையான பண்டங்களையும் சரக்குகளையும் இராமேஸ்வரத்திலிருந்து கொழும்பு கொண்டு சென்றனர். கொழும்பிலிருந்து இலத்திரனியல் பொருட்கள் தமிழகம் சென்றன. இதனால் இரு நாடுகளும் பொருளாதார ரீதியில் இலாபமடைந்தன.

இலங்கையில் உள்நாட்டுப் பிரச்னை போராக மாறியதால் பாதுகாப்பு காரணங்களால் 1981ஆம் ஆண்டு கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. இதனால், தமிழகத்தின் தென்மாவட்டங்கள் வணிகரீதியாகப் பின்னடைவை சந்தித்தன. 2009இல் போர் முடிவுக்கு வந்த நிலையில், கடந்த 2 ஆண்டுகளாக இந்தியா - இலங்கை இடையே மீண்டும் கப்பல் போக்குவரத்துத் தொடங்குவது குறித்து இரு நாட்டு அதிகாரிகள் அளவில் பேச்சுகள் நடைபெற்றன.

21.11.2021இல் அரசுமுறைப் பயணமாக இராமேஸ்வரம் வந்த இலங்கைக்கான இந்திய தூதர் கோபால் பாக்லே இரு நாடுகள் இடையே மீண்டும் கப்பல் போக்குவரத்து தொடங்கு வதற்காக இராமேஸ்வரம், தனுஷ்கோடி பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டார். அதைத் தொடர்ந்து கடந்த ஆண்டு ஜூலை 13இல் தமிழக சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ. வ. வேலு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழக அரசு சார்பில் இந்தியா - இலங்கை இடையே குறைந்த தூர பயணிகள் கப்பல் போக்குவரத்தை தொடங்கும் நோக்கில் இராமேஸ்வரம் - தலைமன்னார், இராமேஸ்வரம் - காங்கேசன் துறை ஆகிய இரண்டு வழித்தடங்களில் இயக்குவதற்கு இராமேஸ்வரத்தில் கப்பலணையும் மேடை, பயணிகள் தங்குமிடம், சுங்க மற்றும் குடியகல்வு - குடிவரவு பிரிவு சோதனை மையங்கள் ஆகிய கட்டுமானங்களை ஏற்படுத்துவதற்கு திட்ட அறிக்கை, மதிப்பீடுகள் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஒப்புதல் கிடைத்தால் இரு நாடுகள் இடையே கப்பல் போக்குவரத்துத் தொடங்கும்.

இது குறித்து நெய்தல் வணிகர் சங்க கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் தில்லைப்பாக்கியம் கூறுகையில், கப்பல் போக்குவரத்து மூலம் இரு நாடுகளும் ஆன்மிகரீதியாகவும் இணைக்கப்படும். இராமேஸ்வரம் வழியாக இலங்கைக்கு இராமாயணம் தொடர்புடைய ஆன்மிக தலங்களுக்குச் செல்ல முடியும்.

இலங்கையிலிருந்து கப்பல் மூலம் இராமேஸ்வரம் வருவோர் ரயில் மூலம் நாட்டின் பிற பகுதிகளில் உள்ள பௌத்த தலங்களுக்கு எளிதில் செல்ல முடியும். இலங்கையிலிருந்து சுற்றுலா, கல்வி, மருத்துவ சிகிச்சைக்காக வரக்கூடியவர்களுக்கு இங்கு செலவு மிகவும் குறைவு. இதன் மூலம் இரு நாடுகள் இடையே நல்லுறவு வளர்வதுடன், தமிழகம் மற்றும் இலங்கை தமிழர்களின் வணிக, பொருளாதாரமும் முன்னேற்றம் அடையும், என்றார். (ஐ)

# கடலில் வீசப்பட்ட தங்கத்தை தேடும் பணி தொடர்கின்றது

*இராமேஸ்வரம், ஜூன் 08*

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக கடத்தி வரப்பட்டு கடலுக்குள் வீசப்பட்ட தங்க கட்டிகளை நீர்மூழ்கி வீரர்களின் உதவியுடன் கடலோர காவல்படையினர் மீட்ட நிலையில், உச்சிப்புளி அருகே நொச்சியூரணி கடலுக்கு அடியில் மூன்றாவது நாளாக தங்கம் தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது.

இலங்கையில் இருந்து மீண்டும் கடத்தல் தங்கம் வர இருப்பதாக கடந்த 5ஆம் திகதி சுங்கத் துறையினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து தனுஷ்கோடி, அரிச்சல் முனை பாம்பன் மண்டபம் வேதாளை உள்ளிட்ட கடலோர பகுதிகளில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

அப்போது உச்சிப்புளி அருகே நொச்சியூரணி கடற்கரைப் பகுதியில் ஒரு படகு கரையை நோக்கி வந்ததை கண்ட சுங்கத்துறையினர் அந்தப் படகை விரட்டி பிடிக்க முயற்சித்தனர். அப்போது படகில் இருந்த இரண்டு பேர் பை ஒன்றை படகில் வீசி எறிந்துவிட்டு தப்பி சென்றனர். இதன் பிறகு படகை சுற்றி வளைத்த சுங்கத் துறையினர் இலங்கையிலிருந்து மீண்டும் கடத்தி வரப்பட்ட 2.5 கோடி (இந்திய) ரூபாய் மதிப்பிலான தங்க கட்டிகளை பறிமுதல் செய்தனர்.

இதனை தொடர்ந்து சுங்கத் துறையினர் படகை பறிமுதல் செய்த போது, தப்பி ஓடியவர்கள் கடலில் மேலும் ஏதேனும் தங்கத்தை விட்டுச்சென்றிருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணை நடத்தினர். அத்துடன், 20 நீர்மூழ்கி வீரர்களின் உதவியுடன் தங்கத்தை தேடி வருகின்றனர். நேற்று மூன்றாவது நாளாகவும் இந்தத் தேடுதல் தொடர்ந்தது.

கடந்த மே 30, 31ஆம் நாட்களில் மட்டும் இலங்கையில் இருந்து கடத்திவரப்பட்ட 17 கோடி (இந்திய) ரூபாய் மதிப்பிலான 32 கிலோ தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஜெயலலிதா ஆட்சியை ஏற்படுத்துவோம் தினகரன், பன்னீர்செல்வம் தெரிவிப்பு!

*தஞ்சாவூர், ஜூன் 08*

"தீய சக்தியான தி. மு. கவை ஆட்சிப் பொறுப்பிலிருந்து அகற்ற ஒருங்கிணைந்து செயல்படுவோம்" என்று தஞ்சாவூரில் நடந்த திருமண நிகழ்வு ஒன்றில் டி. டி. வி. தினகரன் கூறியுள்ளார். இந்நிகழ்ச்சியில் பேசிய ஓ. பன்னீர்செல்வம், "நாம் அனைவரும் ஒற்றுமையுடன் ஒன்று சேர்ந்து இயக்கத்தை வழிநடத்த வேண்டும்" என்றார்.

தஞ்சாவூரில் ஓபிஎஸ் ஆதரவு எம்எல்ஏவான ஆர்.வைத்திலிங்கம் இல்லத் திருமண விழா நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்ற தினகரன், "அ. ம. மு. க. சார்பில் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் மகிழ்ச்சி கொள்கிறேன். கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பு சிலரின் சுயநலப் போக்கால், ஆதிக்க மனப்பான்மையால், பேராசையால், ஜெயலலிதாவின் இயக்கத்தை விட்டு கனத்த இதயத்தோடு நாங்கள் பிரிந்து அ. ம. மு. கவைத் தொடங்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டோம்.

எங்களுக்குள் இருந்த கஷ்டங்களையும், வருத்தங்களையும் புறந்தள்ளிவிட்டு, மீண்டும் தமிழகத்தில் ஜெயலலிதாவின் ஆட்சியையும் இலட்சியங்களையும் நிறைவேற்றும் வகையில், நானும் நண்பர் பன்னீர்செல்வமும் கைகோத்திருக்கிறோம்.

ஜெயலலிதாவின் ஆட்சியைத் தமிழகத்தில் கொண்டு வருவதற்கு அ. ம. மு. க. -அ. தி. மு. க. இணைந்துள்ளது. எனவே, இயற்கையாக இணைந்த இந்த இணைப்பால் துரோகிகளுக்குப் பாடம் புகட்டி, தீய சக்தியான தி. மு. கவை ஆட்சிப் பொறுப்பிலிருந்து அகற்ற நாங்கள் ஒருங்கிணைந்து செயல்படுவோம்" என்றார்.

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பேசுகையில், "எம். ஜி. ஆர்., ஜெயலலிதாவின் தூய தொண்டர்களின் ஆழமான எண்ணங்களிலே, நாம் அனைவரும் ஒன்றாக இணைய வேண்டும் என்ற ஆசைதான் உள்ளது. இன்றைக்கு இருக்கிற அரசியல் சூழ்நிலையில், இந்த இயக்கத்துக்கு ஊறு விளைவித்து, அதை தங்களுக்கு சாதகமான சூழலாக பல எதிர்க்கட்சிகள் மாற்றி வருகின்றன. ஆனாலும், நாம் அனைவரும் ஒற்றுமையுடன் ஒன்று சேர்ந்து இயக்கத்தை வழிநடத்த வேண்டும்.

அனைவருக்கும் நிறைவானதாக இருக்க வேண்டும் என்றுதான் எம். ஜி. ஆர்., ஜெயலலிதா இந்த இயக்கத்தைத் தொடங்கி வழிநடத்தினார்கள். ஆனால் இன்றைக்கு மாறுபட்டிருக்கிறது. நாம் மீண்டும் ஜெயலலிதாவின் ஆட்சியை தமிழகத்தில் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் தான் நமக்கு இருக்க வேண்டும். அதற்கான பிள்ளையார் சுழி இங்கு போடப்பட்டிருக்கிறது.

# நாமல் ராஜபக்ஷவின் பயணத் தடை நீக்கம்

கொழும்பு, ஜூன் 08
காலிமுகத்திடல் செயற்பாட்டாளர்கள் மீதான தாக்குதல் தொடர்பில் சந்தேக நபர்களாக குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சனத் நிஷாந்த, மிலன் ஜயதிலக்க உள்ளிட்ட சந்தேக நபர்களுக்கு எதிரான முறைப்பாட்டை ஜூலை 19ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினருக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பயணத்தடையும் நீக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சந்தேக நபர்கள் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டதாகவும், அந்த ஆலோசனையை சவாலுக்கு உட்படுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளது.

இது குறித்த மேன்முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்பு எதிர்வரும் 23ஆம் திகதி வழங்கப்படவுள்ள நிலையில், இந்த வழக்கை அதன் பின்னர் ஒரு நாளில் விசாரணைக்கு அழைக்குமாறு குற்றப் புலனாய்வு திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கமைய குறித்த முறைப்பாட்டை எதிர்வரும் ஜூலை மாதம் 19ஆம் திகதி மீளவும் அழைக்க கோட்டை நீதவான் திலின கமகே உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதேவேளை, இதன்போது சட்டத்தரணியால் முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை ஏற்றுக் காண்ட நீதவான், சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்களாக பெயரிடப்பட்டுள்ள நாமல் ராஜபக்ச உள்ளிட்ட தரப்பினருக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பயணத்தடையை நீக்குமாறு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கைப் பெண் ஆயிஷா பிரிட்டனில் நீதிபதியானார்



கொழும்பு, ஜூன் 08
இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட 34 வயதான ஆயிஷா என்ற பெண் பிரித்தானியாவில் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

வேல்ஸில் உள்ள கடுமையான குற்றவியல் வழக்குகளை முக்கியமாகக் கையாளும் கிரவுன் நீதிமன்றத்தில் வெள்ளையர் அல்லாத மற்றும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த மிகவும் இளம் நீதிபதியாக ஆயிஷா தெரிவாகியுள்ளார்.

இவர் லீட்ஸ் பல்கலைக்கழகத்தில் மருத்துவ அறிவியலில் இளங்கலைப் பட்டப்படிப்பை முடித்து ஹாரோகேட் மாவட்ட மருத்துவமனையில் நோயியல் நிபுணராகப் பணியாற்றியுள்ளார்.

பரிஸ்டராக பணியாற்றிய அவர் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கஜேந்திரகுமாரை வாக்குமூலமளிக்க நிர்ப்பந்தம் செய்வது சட்டவிரோதம்!

## சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 08
பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இன்றைய தினமே மருதங்கேணிக்கு சென்று வாக்குமூலம் கொடுக்கவேண்டும் என நிர்ப்பந்திப்பது சட்டவிரோதமானது என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் உள்ள அவரது வீட்டில் வைத்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்படுவதற்கு முன்னர் பொலிஸார் விடுக்கும் அறிவிப்பை மேற்கோளிட்டு சுமந்திரன் ருவிட்டரில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவரை கைது செய்யும் நடவடிக்கை பாராளுமன்ற சிறப்பரிமையை மீறுகின்ற செயல் என்றும் சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்ற அமர்வு நடைபெறுகின்ற வேளையில் அதில் கலந்து கொள்வதைத் தடுக்கும் இத்தகைய செயற்படு சட்டவிரோதமானதும் அடக்குமுறையின் வெளிப்பாடு என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஜீப் வண்டி கவிழ்ந்ததில் மூன்று பொலிஸார் காயம்



கொழும்பு, ஜூன் 08
நோர்வூட் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸாரின் ஜீப், பள்ளத்தில் விழுந்து விபத்துக்கு உள்ளானதில் மூவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு ரோந்து சேவையில் ஈடுபட்டிருந்த நிலையிலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

காயமடைந்த மூவரும், டிக்கோயா- கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நோர்வூட்- பொகவந்தலாவை பிரதான வீதியில், வெஞ்சர் தேயிலைத் தொழிற்சாலைக்கு அண்மையிலேயே பள்ளத்தில் புரண்டு ஜீப் விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

காயமடைந்த பொலிஸாரை அந்தத் தோட்டத்தைச் சேர்ந்த மக்கள் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்தனர். (அ)

# சமந்த குமாரவின் மரணம் ஒரு குற்றம்

## சந்தேகநபர்களை கைது செய்ய உத்தரவு

கொழும்பு, ஜூன் 08
பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட நிலையில், அவர்களின் பொறுப்பிலிருந்தபோது உயிரிழந்த இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் முகாமைத்துவ உதவியாளர் சமந்த பிரீத்தி குமார ஆயுதங்களால் தாக்கப்பட்டதாலேயே உயிரிழந்துள்ளதாக மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றம் தீர்மானித்தது.

பொலிஸாரின் பொறுப்பில் இருக்கும்போது, அவர்களின் தாக்குதலினால் சமந்த பிரீத்தி குமார உயிரிழந்துள்ளமை சான்றுகள் ஊடாக புலப்படுவதாகவும், குற்றம் ஒன்று நடந்திருப்பதை சான்றுகள் வெளிப்படுத்துவதால், இதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களை உடனடியாக கைது செய்யுமாறு மாளிகாகந்தை நீதவான் லோச்சனி அபேவிக்ரம குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

நீண்ட சாட்சி பகுப்பாய்வுகளின் பின்னர், நீதிவான் நேற்று முன் தினம் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

கடந்த ஜனவரி மாதம் 10 ஆம் திகதி, இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் முகாமைத்துவ உதவியாளர் சமந்த பிரீத்தி குமார, நாரஹேன்பிட்டியில் உள்ள தனது அலுவலகத்திலிருந்து நண்பருடன் மதிய உணவுக்காக அருகில் உள்ள உணவகத்துக்கு சென்றிருந்தார்.

அவரது நண்பர் உணவகத்தில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, சமந்த பிரீத்திகுமார தான் வாங்கிய உணவை எடுத்துக்கொண்டு அலுவலகத்துக்கு சென்று கொண்டிருந்தார். ஜீப்பில் வந்த சிலர் அவரை அழைத்துச் சென்றிருந்தனர்.

பின்னர் சமந்த பிரீத்திகுமாரவின் சடலம் தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக உறவினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பு தொடர்பான விசாரணையின்போது, அந்த வலையமைப்பின் முக்கிய புள்ளி என்ற சந்தேகத்தின் பேரில் சமந்த பிரீத்தி குமார கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ அப்போது தெரிவித்திருந்தார்.

விசாரணையின்போது, போத்தல் ஒன்றை இரண்டாக உடைத்து சந்தேக நபர் பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்டதாகவும், இதன்போது அத்தாக்குதலில் இருந்து தம்மை காப்பாற்ற பொலிஸார் குறைந்தபட்ச பலப் பிரயோகம் செய்ததாகவும் நிஹால் தல்துவ அப்போது கூறியிருந்தார்.

எவ்வாறாயினும், நீதிமன்றில் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சியங்கள் பிரகாரம் சமன் குமார மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இரத்தம் கசிந்து அவர் உயிரிழந்துள்ளமை தெரியவந்தது. இந் நிலையிலேயே, சந்தேக நபர்களைக் கைது செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ)

# ஓ. எல். பரீட்சை நிலையங்களில் மூன்று மோசடி சம்பவங்கள் பதிவு

கொழும்பு, ஜூன் 08
கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைகளில் மூன்று பரீட்சை நிலையங்களில் மூன்று மோசடிச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

அதன்படி பிபில, வெல்லஸ்ஸ தேசிய பாடசாலை பரீட்சை நிலையத்தில் பரீட்சார்த்தி ஒருவர் கணித பாட வினாத்தாளை ஆசிரியரொருவருக்கு அனுப்பி வட்ஸ்அப் மூலமாக விடைகளை பெற்றுக்கொண்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஹேனேகம மகா வித்தியாலயத்தின் பரீட்சை நிலையத்தில் பரீட்சார்த்திகள் இருவர் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்தி கணித பாட வினாத்தாளை ஆசிரியர்கள் இருவருக்கு அனுப்பி விடைகளை பெற்றுக்கொள்ள முயற்சித்தபோது பரீட்சை கண்காணிப்பாளரால் கண்டுபிடிக்கப்பட்டார்.

இதேவேளை, சீதுவ தவிசமர கல்லூரி பரீட்சை நிலையத்தில் பரீட்சார்த்திகள் ஐவர் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி கணித பாட வினாத்தாள்களை ஆசிரியர்களுக்கு அனுப்பி விடைகளைப் பெற்றுக்கொள்ள முயற்சித்த சம்பவமும் பதிவாகியுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்புபட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படவுள்ளன. (அ)

# மாணவருக்கு மின்னஞ்சல் உருவாக்கும்போது பெற்றோரின் தகவல்களை உள்ளிடவேண்டாம்!

## குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அறிவிப்பு

**கொழும்பு, ஜூன் 08**

**பாடசாலை மாணவர்களுக்கு, மின்னஞ்சல் கணக்குகளை உருவாக்கும்போது, பெற்றோரின் தகவல்களை உள்ளீடு செய்ய வேண்டாம் என பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பாராளுமன்றக் குழுவில் தெரிவித்துள்ளனர்.**

எனவே, குறித்த சந்தர்ப்பத்தின்போது, மாணவர்களின் சரியான வயது உள்ளிட்ட தகவல்களை வழங்குமாறு, நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில், பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இணையவழிக் கல்வி முறைமை காரணமாக, மாணவர்களின், பயன்பாட்டுக்காக கைத்தொலைபேசிகள் உள்ளிட்ட கணினி சாதனங்களை அவர்களுக்கு வழங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாக அதிகாரிகள் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர்.

எவ்வாறாயினும், ஸ்மார்ட் போன் என்ற திறன்பேசிகளை வழங்கும்போதும், மின்னஞ்சலைத் தொடங்கும்போதும் பெற்றோர்களின் தரவை வழங்குவதன் மூலம், குழந்தைகள் எந்தவொரு இணையத்தளத்தையும் அணுகுவதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள் என்று பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அவ்வாறின்றி, பிள்ளைகளின் சரியான வயது உள்ளிட்ட தகவல்களை வழங்கினால், தேவையற்ற காணொளிகள், மற்றும் இணையத்தளங்களைப் பார்ப்பதற்கு பிள்ளைகளுக்கான அணுகல் தாமாகவே கட்டுப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தனர்.

தொலைபேசியைப் பயன்படுத்தும்போது இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் குறித்த கைத்தொலைபேசி அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்க வேண்டியது அவசியமாகும்.

அதாவது எந்தவொரு குற்றச்செயலுக்கும் கைத்தொலைபேசிகள் பயன்படுத்தப்பட்டால், அதை விரைவாக சமாளிக்கும் திறன் இந்த கைத்தொலைபேசிகளுக்கு உள்ளது.

அதாவது தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவில் பதிவுசெய்யப்பட்ட கைத்தொலைபேசிகளில் சிம் அட்டைகளை இடும்போது, அது தொடர்பான தகவல்களை ஆணைக்குழு பெறுகிறது.

எனவே, கைத்தொலைபேசிகளைக் கொள்வனவு செய்யும் போது, அவை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டவையா? என்பதை உறுதிசெய்துகொள்ளுமாறும் பொலிஸ் அதிகாரிகள், குறித்த குழுவில் தெரிவித்தனர். (அ)

# ஐந்து வயதுச் சிறுமி உட்பட கோர விபத்தில் இருவர் பலி

கொழும்பு, ஜூன் 08

வாகன விபத்தில் ஐந்து வயது சிறுமி உட்பட இருவர் சாவடைந்துள்ளனர்.

வேகமாக வந்த கார் ஒன்றும் ஹைஏஸ் வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் அநுராதபுரம், இராஜாங்கனையில் நேற்று முன் தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது காரைச் செலுத்திச் சென்ற 67 வயதான வயோதிபரும், காரின் முன் ஆசனத்தில் அமர்ந்து சென்ற ஐந்து வயதுச் சிறுமியும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, காரின் பின் ஆசனத்தில் அமர்ந்து சென்ற- விபத்தில் சாவடைந்த ஐந்து வயதுச் சிறுமியின் தந்தை (வயது-35), தாய் (வயது-32) ஆகியோர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஹைஏஸ் வாகனத்தின் சாரதியான 28 வயது இளைஞரும் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ)

# கிளிநொச்சி புதுக்குளத்தில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

கிளிநொச்சி, ஜூன் 08

கிளிநொச்சி புதுக்குளத்தில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்வா நகர் பகுதியில் உள்ள புதுக்குளத்தில் செல்வா நகர் பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய செல்லக்கண்டு குணசேகரம் என்ற ஆறு பிள்ளைகளின் தந்தை குளத்தில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# நடாஷா, புருனோவுக்கு தொடர்ந்தும் மறியல்

கொழும்பு, ஜூன் 08

சமூக செயற்பாட்டாளர் நடாஷா எதிரிசூரிய மற்றும் புருனோ திவாகர ஆகியோரை எதிர்வரும் ஜூன் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்ட நடாஷா எதிரிசூரிய, கடந்த மே 28ஆம் திகதி நாட்டை விட்டு வெளியேற முற்பட்ட போது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

அதனையடுத்து, நடாஷா எதிரிசூரியவின் கருத்துகளை சமூக ஊடகங்களில் பகிர்ந்து அவருக்கு உதவி குற்றச்சாட்டில் புருனோ திவாகராவும் கைது செய்யப்பட்டார். (அ)

# மதுபோதையில் உணவகத்தில் ஊழியரை தாக்கிய மதுவரி திணைக்கள அதிகாரிகள்!

கொழும்பு, ஜூன் 08

மதுபோதையில் இருந்த மதுவரித் திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று, கொழும்பு-வன் கோல்பேஸ் கட்டடத் தொகுதியில், உள்ள உணவகம் ஒன்றின் பணியாளரைத் தாக்கியதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில், விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மதுவரித் திணைக்கள ஆணையாளரின் ஆலோசனைக்கு அமைய, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் கபில குமாரசிங்க தெரிவித்தார்.

குறித்த தாக்குதல் சம்பவத்தில், அந்த உணவகத்தின் பணியாளர் ஒருவரும், மதுவரித் திணைக்கள அதிகாரி ஒருவரும், காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வன் கோல்பேஸ் கட்டடத் தொகுதியின் 6ஆம் மாடியில் உள்ள உணவகம் ஒன்றில் இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடமையை நிறைவு செய்த குறித்த உணவகத்தின் பணியாளர் ஒருவர், தமது தலைக்கவசத்தை மேசை ஒன்றின் மீது வைத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, குறித்த இடத்திற்குச் சென்ற, மதுவரித் திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று, அந்த தலைக்கவசத்தை எடுத்துச்செல்ல முயற்சித்து, பின்னர் மீண்டும் அங்கேயே வைத்துள்ளமை சி.சி.ரி.வி காணொளிக் காட்சிகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இதன்போது, மதுவரித் திணைக்கள அதிகாரிகள், குறித்த உணவக முகாமையாளர் மற்றும் பணியாளருடன், வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, மதுவரித் திணைக்கள அதிகாரிகள், குறித்த உணவகத்தின் பணியாளர் மீது தாக்குதல் நடத்துவது, சி.சி.ரிவி காணொளிக் காட்சிகளில் பதிவாகி உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தின்போது, குறித்த மதுவரித் திணைக்கள அதிகாரிகள், மதுபோதையில் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# ராஜாங்கனை சத்தாரத்ன தேரருக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 08

சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ராஜாங்கனை சத்தாரத்தன தேரரை எதிர் வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாட்டில் மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையிலான கருத்துக்களை வெளியிட்டதற்காக கடந்த மே மாதம் 28ஆம் திகதி சத்தாரத்தன தேரர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# புதையல் தோண்ட சென்ற விசாரணை அதிகாரி கைது!

கொழும்பு, ஜூன் 08

குருநாகல் பொலிஸ் குற்ற விசாரணைப் பிரிவின் நீதிமன்ற நடவடிக்கைக்குப் பொறுப்பான பொலிஸ் உத்தியோகத்தர் புதையல் தோண்டச் சென்றபோதே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த அதிகாரி நேற்று முன் தினம் குருநாகல் - வெல்லவ பிரதேசத்தில் புதையல் தோண்டும் பணியில் ஈடுபட்டிருந்த போதே வெல்லவ குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டதாக குருநாகல் பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

சந்தேகநபர் குளியாபிட்டிய நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ)

# அரசு மேற்கொண்ட தீர்மானங்களால் ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ளது

## நிதி இராஜாங்க அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 08

அரசாங்கம் மேற்கொண்ட தொலைநோக்கு பொருளாதார தீர்மானங்களினால் டொலர் கையிருப்பு அதிகரிப்பு மற்றும் டொலரின் தேவை குறைதல் போன்ற காரணங்களால் ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

டொலரின் பெறுமதி வீழ்ச்சியானது ஏற்றுமதி வருமானத்தை நேரடியாகப் பாதிக்கும் என அமைச்சர் கூறினார்.

வெளிநாட்டு பணப்பரிமாற்றத்தின் அதிகரிப்பு, சுற்றுலாத் துறையின் புத்துயிர் மற்றும் 1,216 பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதனால் தற்போது வெளிநாட்டுக் கையிருப்பு 3 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- ரூபாயின் பெறுமதி வலுவடைந்து வருகின்றமைக்கு பல முக்கிய காரணங்கள் உள்ளன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது, கடந்த ஆண்டை விட, நாம் பெறும் வெளிநாட்டுப் பணம் அதிகமாக இருப்பதைக் காண முடிகிறது. மறுபுறம், சுற்றுலாத் துறையால் கிடைக்கும் வருமானமும் அதிகரித்துள்ளது.

இதேவேளை, டொலரின் தேவை குறைந்துள்ளது. இந்த நேரத்தில் மத்திய வங்கி டொலர்களை வாங்க சில கட்டுப்பாடுகளை செய்கிறது. குறுகிய காலத்தில் சுமார் 1,500 மில்லியன் டொலர்களை வாங்கினோம். அது பூச்சியமாக சரிந்திருந்தது. இன்று கையிருப்பு அளவு 03 பில்லியனைத் தாண்டியுள்ளது.

மேலும் டொலர் வீழ்ச்சியைக் கட்டுப்படுத்தியுள்ளோம். ரூபாயின் பெறுமதி அதிகரிப்பானது அரசாங்கத்தால் செயற்கையாக செய்யப்பட்டதல்ல. முறையான நிர்வகிப்புகளாலேயே இது நடக்கிறது. எவ்வாறாயினும் டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்தால் ஏற்றுமதி தொழிலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

உயர்வை அரசு செயற்கையாக செய்த ஒன்றும் இல்லை. அதை முறையாக நிர்வகிப்பதன் மூலம் டொலரின் மதிப்பு தேவையற்றது என்பது தெளிவாகிறது. டொலர் வீழ்ச்சியடைந்தால், அது ஏற்றுமதி தொழிலுக்கு பெரும் பிரச்னையாகிவிடும்- என்றார். (அ)

# அதிகார வரம்பை மீறிப் பொலிஸார் செயல்படுவது கண்டனத்துக்குரியது!

## சஜித் அணி எம்.பி. காட்டம்



கொழும்பு, ஜூன் 08

“நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டிய புலனாய்வாளர்களும் சட்டம் - ஒழுங்கைக் காக்கவேண்டிய பொலிஸாரும் தங்கள் அதிகார வரம்பை மீறிச் செயல்படுவது கண்டனத்துக்குரியது.” - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான கெடுபிடிகள் தொடர்பில் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகளினதும் அவர்களின் ஆதரவாளர்களினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்த வேண்டும்.

மக்களின் தோழனாக இருக்கவேண்டிய பொலிஸார் மக்களையும் அவர்களின் பிரதிநிதிகளையும் ஆயுதமுனையில் அச்சுறுத்துவது இந்த நாட்டின் ஜனநாயகத்தை கேள்விக் குட்படுத்துகின்றது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் அரசு சாக்குப் போக்குக் காரணங்களைக் கூறாமல் உண்மை நிலைவரங்கள் தொடர்பில் ஆராய வேண்டும். குற்றவாளிகள் யாராக இருப்பினும் தண்டிக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# சிலிண்டர் வெடித்து 6 பேர் காயம்

கொழும்பு, ஜூன் 08

கண்டி - தெல்தோட்டை பகுதியிலுள்ள ஹொட்டலொன்றில் சமையல் எரிவாயு வெடித்ததில் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த வெடிப்பு சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த ஐவர் தெல்தோட்டை வைத்தியசாலையிலும் ஒருவர் கண்டி போதனா வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் கூறினர்.

25 தொடக்கம் 40 வயதுக் குட்பட்ட 6 பேரே சம்பவத்தில் காயமடைந்துள்ளனர். (அ)

# இலங்கை- இந்திய மின் கட்டமைப்பை 2030 இற்குள் ஒன்றிணைக்க தீர்மானம்

கொழும்பு, ஜூன் 08

2030 ஆம் ஆண்டுக்குள் இலங்கை - இந்திய மின் விநியோக கட்டமைப்பை ஒன்றிணைப்பதற்கு முன்னுரிமையளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கான தொழில்நுட்ப அறிவு மற்றும் வணிகக் கட்டமைப்பை தயாரிப்பதற்கு உலக வங்கியினால் இலங்கை மின்சார சபைக்கு ஆதரவு வழங்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த திட்டம் தொடர்பில் உலக வங்கியின் பிராந்திய வலையமைப்புத் திட்டத்தின் பணிப்பாளர் பசில் ப்ரூமன் மற்றும் உலக வங்கியின் இலங்கைக்கான முகாமையாளர் சியோ கென்டா ஆகியோர் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் அதிகாரிகளுடன் நேற்றுமுன்தினம் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். (அ)

# முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் பயன்படுத்தும் வீதிகள் அபிவிருத்தி!

## இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 08

முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாயிகள் பெரிதும் பயன்படுத்தும் வீதிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் மொஹான் டி சில்வா தெரிவித்தார்.

அதேபோன்று ஜனாதிபதியின் வழிகாட்டலுக்கு அமைய, நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகளின் நெல்லை சாதாரண விலையில் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. சார்ள்ஸ் நிர்மலாதன் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் கொக்குத்தொடுவாயில் இருந்து திருகோணமலை மாவட்டத்தின் தென்னைமரவாடி வரை செல்லும் சுமார் 15 கிலோ மீற்றர் நீளம் கொண்ட வீதி, விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருவதையும், அந்த வீதி பெரிதும் சேதமடைந்துள்ளமை தொடர்பிலும் நாம் அறிவோம்.

அந்த வகையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசத்தில் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மூன்று பாலங்கள் முதற் கட்டமாக அமைக்கப்பட்டுள்ளன.

நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டபோதும் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், விவசாய அமைச்சு மேற்படி வீதிகளை விரைவாக அபிவிருத்தி செய்து தருமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

அதேபோன்று நெல் கொள்வனவு தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்னைகள் சம்பந்தமாக சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. சபையில் குறிப்பிட்டார்.

எவ்வாறெனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலுக்கு அமைய, நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சாதாரண விலையில் நெல் சந்தைப்படுத்தும் சபை மூலம் நெல் கொள்வனவு செய்யப்பட்டு வருகிறது-என்றார். (அ)

# இலங்கையில் கோழிப் பண்ணைகள் காணாமல்போகும் அபாய நிலைமை

கொழும்பு, ஜூன் 08

கோழி இறைச்சியினை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கான ஆயத்தங்கள் இடம்பெறுவதாக தேசிய கால்நடை உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் இணைப்பாளர் சுஜீவ தம்மிக தெரிவித்தார்.

கோழி இறைச்சியின் விலை தொடர்ந்து அதிகரிப்பதன் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உடனடியாக தற்போது நிலவும் விலையினை ஆய்வு செய்து திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டும். கால்நடை உற்பத்தித் திணைக்களம் முழுமையாக இதில் தலை யிட்டு தீர்வு காணாவிட்டால் கோழிப் பண்ணைகள் நாட்டிலிருந்து காணாமல் போய்விடும்.

எனவே கோழி இறைச்சியினை இறக்குமதி செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்படும்-என்றார். (அ)

# பிரதேச சபையின் செயலாளர் கைது!

கொழும்பு, ஜூன் 08

சூரியவெவ பிரதேச சபையின் செயலாளர் 50,000 ரூபாவை இலஞ்சமாக பெறும் போது இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டார்.

சூரியவெவ சந்தையை நடத்தும் ஒப்பந்ததாரர் ஒருவரிடமிருந்து 100,000 ரூபா இலஞ்சம் கோரப்பட்டது. இந்நிலையில் அது 50,000 ரூபாவாக குறைக்கப்பட்டது.

பின்னர் அதனை பெற்றுக்கொண்டபோதே அவர் கைது செய்யப்பட்டதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு தெரிவித்துள்ளது. (அ)

# மலையக மக்களின் மேம்பாட்டுக்கு பிரான்ஸிடம் உதவி கோரிய ஜீவன்

கொழும்பு, ஜூன் 08

மலையக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும், அவர்கள் எதிர்நோக்கும் போஷனை மற்றும் தற்சார்பு பொருளாதார பிரச்னைகளுக்கு பிரான்ஸ் அரசாங்கம் தனது பங்களிப்பை செய்ய முன்வரவேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.



இலங்கைக்கான பிரான்ஸ் நாட்டு தூதுவர் ஜோன் போன்ஷூவா பெக்டே, அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஷ்வரன், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, சௌமிய மூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி காந்தி சௌந்தர்ராஜன் ஆகியோர் கொண்ட குழுவினரை நேற்று கொழும்பில் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இதன்போது, அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளதாவது:

இந்த நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பிரான்ஸ் அரசாங்கம் செய்து வரும் உதவிகளையும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் மலையக மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் அமைச்சர் என்ற வகையில் அந்த மக்களின் சார்பாக நன்றி கூற கடமைப் பட்டுள்ளேன்.

இதேவேளை தாங்கள் எமது மலையக மக்களின் அபிவிருத்திக்கும் அவர்களின் வாழ்வாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும், மலையகப் பகுதிகளில் பிரான்ஸ் அரசாங்கத்தின் நிதி உதவி உடன் பால் உற்பத்தியை அதிகரிக்கவும், போஷனை அபிவிருத்தி தொடர்பாக தாங்கள் பிரான்ஸ் தூதுவர் என்ற வகையில் தங்களின் அரசின் வழிகாட்டல்களை மேற்கொள்ளவேண்டும்.

மேலும், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரான்ஸ் அரசாங்கம் எமது நாட்டின் முதலீடுகளை மேற்கொள்ள ஆவணம் செய்ய வேண்டும்-என்றார். (அ)

# மனித வரலாற்றில் ஆணாதிக்கம் எப்போது தொடங்கியது?

ஆணாதிக்க சமூகத்தின் தோற்றம் குறித்து பல நூற்றாண்டுகளாக மக்கள் தவறான புரிதல்களைக் கொண்டுள்ளனர் என்கிறார் ஏஞ்சலா சைனி.

மனித சமூகத்தின் வரலாற்றில் ஆணாதிக்க அணுகுமுறை எப்போது தொடங்கியது எப்படி என்பதை இங்கு காண்போம்.

லண்டன் மிருகக்காட்சி சாலையில் இருந்த 'பபூன்' வகை குரங்குகளின் காட்சிப் பகுதி மூடப்படும் என்று 1930இல் அதன் நிர்வாகம் அறிவித்தபோது அது தலைப்பு செய்தியானது.

அந்த மிருகக்காட்சி சாலையில் பூபன் வகை குரங்குகள் இருந்த பகுதி 'மங்கி ஹில்' என்றே பல ஆண்டுகளாக அறியப்பட்டது. அங்கு குரங்குகளுக்குள் ரத்தக்களரியான வன்முறை சம்பவங்களும், அதன் விளைவான மரணங்களும் அவ்வபோது அரங்கேறும் காட்சிகளாக இருந்து வந்தன.

ஒரு நேரம், மங்கி ஹில்னின் வயதான குரங்கிற்கு சொந்தமான பெண் குரங்கை, அந்தக் கூட்டத்தின் இளம் வயது குரங்கு ஒன்று அபகரிக்க முயன்றது. இதன் விளைவாக குரங்குகளுக்குள் ஏற்பட்ட சண்டையின் முடிவில் பெண் குரங்கை இளம் வயது ஆண் குரங்கு கடித்துக் குதறி கொன்றது. இந்தச் சம்பவம் குறித்து அமெரிக்காவின் டைம் இதழில் செய்தி வெளியாகியிருந்தது.

ஆணாதிக்கம் குறித்த விலங்கின வல்லுநர்களின் கற்பனையில் மங்கி ஹில்லில் நிகழ்ந்த இந்தச் சம்பவம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

பபூன் குரங்கினத்தின் கொலைவெறி செயல் மனிதன் இயற்கையாகவே ஆணாதிக்க மனநிலை கொண்ட இனம் என்ற கட்டுக்கதைக்கு வலு சேர்த்தது. ஆனால் இயற்கையாகவே இந்த குரங்கினங்களில் வன்முறையில் ஈடுபடும் ஆண் குரங்குகள் பலவீனமான பெண் குரங்குகளை எப்போதும் பலி வாங்குபவையாக இருந்தன.

மங்கி ஹில்சில் பல ஆண் குரங்குகள் குறைந்த எண்ணிக்கையிலான பெண் குரங்குகளுடன் ஒன்றாக விடப்பட்டிருந்தன. இதன் விளைவாக அங்கு ஒரு விதத்தில் சிதைந்து போன சமூக சூழல் உருவானது.

மரபியல்ரீதியாக மனிதனுடன் தொடர்புடைய 'போனாபோ' வகை குரங்குகள், தாய்வழி பராம்பரியத்தைக் கொண்டவை என்று பல தசாப்தங்களுக்குப் பிறகு கண்டறியப்பட்டது.

இதையடுத்து நம் சொந்த இனங்களில் ஆணாதிக்கத்தை இயற்கையால் மட்டும் விளக்க முடியாது என்பதை உயிரியல் வல்லுநர்கள் ஏற்றுக் கொண்டனர்.

கடந்த சில ஆண்டுகளாகத் தனது **'The Patriarch'** புத்தகத்திற்காக, மனித ஆணாதிக்கத்தின் தோற்றத்தைப் புரிந்துகொள்ள உலகம் முழுவதும் பயணம் செய்து வருகிறேன் என்றார் ஏஞ்சலா சைனி.

ஆண் இனத்துக்கு எப்படி அதிக அதிகாரம் வந்தது என்பது பற்றிய பல கட்டுக்கதைகள் இருந்தாலும், இது தொடர்பான உண்மையான வரலாறு பாலின சமத்துவத்தை நாம் எவ்வாறு அடையலாம் என்பது பற்றிய அறிவையும் அளிக்கக்கூடும் என்பதை அறிந்தேன் என்கிறார் அவர்.

'தந்தையின் ஆட்சி' எனப் பொருள்படும் ஆணாதிக்கம் என்ற வார்த்தை, ஆண்களை குடும்பத் தலைவர்களாகக் கருதுவதில் தொடங்கி, அவர்கள் தங்களின் அதிகாரத்தை மகன்களுக்குக் கடத்துவதாக நீண்டகாலமாக நம்பப்பட்டு வந்ததை பிரதிபலித்தது.

ஆனால் இதுவே விலங்கினங்களின் உலகில் தலைமுறைகளுக்கு இடையிலான குடும்ப உறவுகள் தாய்வழி மூலமே தொடர்ந்து கட்டமைக்கப்படுகின்றன. தந்தை வழி மூலமாக அல்ல என்கிறார் நியூ மெக்சிகோ பல்கலைக்கழகத்தின் மானுடவியலாளரான மெலிசா எமெரி தாம்சன்.

### தாய்வழி சமூகம்

மனிதர்களிடையே ஆணாதிக்கம் என்பது உலகளாவிய விஷயம் இல்லை. ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் அமெரிக்கா கண்டங்கள் முழுவதும் குறைந்தபட்சம் 160 தாய்வழி சமூகங்களை மானுடவியலாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.



இந்தச் சமூக மக்கள் தலைமுறை தலைமுறையாக தங்களின் தாய்வழி குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். மரபுரிமை தாய்மார்களிடம் இருந்து அவர்களின் மகள்களுக்குச் செல்கின்றன. இந்தச் சமூகங்கள் சிலவற்றில் பெண் தெய்வங்களின் வழிபாடும் நடைமுறையில் உள்ளன. இந்தச் சமூக மக்கள் வாழ்நாள் முழுவதும் தங்களின் தாய் வீட்டிலேயே வாழ்கின்றனர்.

தென்மேற்கு சீனாவில் உள்ள மோசுவோ இன ஆண்கள், தங்களது குழந்தைகளின் வளர்ப்பைவிட, சகோதரிகளின் குழந்தைகளை வளர்ப்பதற்கு முக்கியத்துவம் தருகின்றனர் என்பது தாய்வழி சமூகத்துக்கான சிறந்த சான்றாகப் பார்க்கப்படுகிறது.

தாய்வழி சமூகங்களில் அதிகாரமும், செல்வாக்கும் பெரும்பாலும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையே பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

கானாவில் உள்ள அசாண்டே எனும் தாய்வழி சமூகத்தில் தலைமைப் பொறுப்பு ராணிக்கும், ஆண் தலைவருக்கும் இடையே பகிரப்படுகிறது. அசாண்டே சமூக ஆட்சியில் ராணியாக இருந்த நானா யா அசந்தேவா, பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சியில் ராணுவத்தை வழி நடத்தியவராகத் திகழ்ந்தார்.

துருக்கியின் தெற்கு அனடோலியாவில் உள்ள 9,000 ஆண்டுகள் பழைமையான, கற்காலத்தை குறிக்கும் இடமான கேட்டல்ஹோயக் **(Catalhoyuk)**, அதன் அளவு மற்றும் அமைப்பின் அடிப்படையில் உலகின் மிகப் பழைமையான நகரம் என்று ஒரு காலத்தில் அறியப்பட்டது.



இங்கு கிடைத்த கிட்டத்தட்ட அனைத்து தொல்பொருள் தரவுகளும், இந்தக் குடியேற்றத்தில் ஆண், பெண் பாலின அதிகாரங்களுக்கு இடையிலான சிறிதளவு வித்தியாசத்துடன் மக்கள் எப்படி வாழ்ந்தனர் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன.

2018ஆம் ஆண்டு வரை கேட்டல்ஹோயக் ஆராய்ச்சித் திட்டத்திற்குத் தலைமை தாங்கிய ஸ்டான் போர்ட் பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் ஆய்வாளரான இயன் ஹோடர் கருத்துப்படி, "தொல்பொருள் ஆய்வில் கண்டறியப்படும் தளங்களின் பெரும்பாலானவற்றில், ஆண்களும், பெண்களும் வெவ்வேறு வாழ்க்கை மற்றும் உணவு முறையைக் கொண்டிருப்பதை அறிய முடிகிறது.

ஆனால் கேட்டல்ஹோயக் குடியேற்றத்தில் ஆண்களும், பெண்களும் ஒரே மாதிரியான உணவுமுறையைக் கொண்டிருந்தனர். இரு பாலினத்தவரும் வீட்டுற்கு உள்ளேயும், வெளியேயும் ஒரே அளவில் நேரத்தைச் செலவிட்டனர்.

ஒரே வகையான வேலைகளையே அவர்கள் செய்தனர். பாலினங்களுக்கு இடையிலான உயர வேறுபாடும்கூட குறைந்த அளவே இருந்தது," என்கிறார் அவர்.

கேட்டல்ஹோயக் மற்றும் பிற இடங்களில் ஒரே காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் ஏராளமான பெண் சிலைகள் கண்டறியப்பட்டன.

பல்வேறு தொல்பொருள் அருங்காட்சியகங்களை அலங்கரித்து வரும் இந்தச் சிலைகளில், அங்காரா அருங்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ள ஒரு பெண் சிலை மிகவும் பிரபலமானது.

கேட்டல்ஹோயக்கில் கண்டெடுக்கப்பட்ட, அனடோலியன் நாகரிகத்தை விளக்கும் அந்தச் சிலை, அழகான பெண் ஒருவர் கம்பீரமாக அமர்ந்திருப்பது போலவும், அவள் தன் இரு கைகளுக்குக் கீழேயும் இரண்டு பெரிய பூனைகள் அல்லது சிறுத்தைகளை அடக்கி வைத்திருப்பது போலவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

### ஆண், பெண் பாலின பாகுபாடு

கேட்டல்ஹோயக் நாகரிகத்தில் இருந்த ஆண், பெண் பாலின வாழ்க்கை முறை அதன்பின் எப்போதும் தொடர்ந்ததாகத் கெரியவில்லை. நவீன கால ஐரோப்பா, ஆசியா, மத்திய கிழக்குப் பகுதிகளில் ஆண், பெண் பாலின பாகுபாட்டைக் குறிக்கும் பல்வேறு படிநிலைகள், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சமூகத்தில் மெல்ல மெல்ல ஊடுருவின.

பண்டைய ஏதென்ஸ் போன்ற நகரங்களில் பெண்கள் பலவீனமானவர்கள் அவர்களை நம்பக்கூடாது. அவர்களை வீட்டுக்குள் அடைத்து வைப்பதே நல்லது என்பன





போன்ற கற்பிதங்களை சுற்றியே முழு கலாசாரமும் வளர்ந்தது. இப்படி நிகழ்ந்தது ஏன் என்பதே மிகப்பெரிய கேள்வி.

ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையிலான அதிகார சமநிலையில் விவசாயம் ஒரு முக்கியப் புள்ளியாக இருந்திருக்க முடியுமா என்று மானுடவியலாளர்களும் தத்துவவாதிகளும் கேள்வி எழுப்புகின்றனர்.

விவசாயத்தை மேற்கொள்ள அதிக உடல் வலிமை தேவைப்பட்டது. விவசாயத்தை மனிதன் கைக்கொண்ட பிறகே, அவன் கால்நடைகள் போன்ற சொத்துகளை வைத்திருக்க ஆரம்பித்தான்.

ஒப்பீட்டளவில் சிலர் மற்றவர்களைவிட அதிக சொத்துகளைச் சேர்த்ததால், சமூகத்தில் அவர்கள் செல்வாக்கு மிக்கவர்களாக உருவெடுத்தனர். அவர்கள் தங்களின் சொத்துகளை சட்டப்பூர்வ ஆண் வாரிசுகளுக்கே தர விரும்பினர். இதன் காரணமாக அவர்கள் பெண்களின் பாலியல் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தினர்.

### விவசாயத்தில் பெண்களின் பங்கு

உலக அளவில் பெண்களும் எப்போதும் விவசாயப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பதுதான் இதில் கவனிக்கத்தக்க விஷயம்.

எடுத்துக்காட்டாக, பண்டைய கிரேக்க மற்றும் ரோமானிய இலக்கியங்களில் பெண்கள் சோளம் அறுவடை செய்வதாக சித்தரிக்கப்பட்டுள்ளது. மேலும் கால்நடை மேய்ப்பவர்களாக பணியாற்றும் இளம் பெண்களின் கதைகளும் உள்ளன.

ஐக்கிய நாடுகள் சபை தரவுகளின்படி, இன்றும்கூட உலக அளவில் விவசாய தொழிலாளர்களில் பாதி பேர் பெண்களாக உள்ளனர். குறைந்த வருவாய் உள்ள நாடுகளில் கால்நடை மேலாண்மை பணிகளில் கிட்டத்தட்ட பாதி அளவுக்கு பெண்களே பங்கு வகிக்கின்றனர். உலக அளவில் உழைக்கும் மற்றும் அடிமை வர்க்க பெண்கள் கடுமையான உடல் உழைப்பை மேற்கொள்பவர்களாகவே உள்ளனர்.

பாலின அடிப்படையிலான அடக்குமுறைக்கான வரலாற்றுப் பதிவுகள் கண்டறியப்படுவதற்கு முன்பு இருந்தே நீண்ட காலமாக தாவர மற்றும் விலங்குகளின் வளர்ப்பு இருந்து வந்தது என்பதுதான் ஆணாதிக்க வரலாற்றில் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சம் என்கின்றனர் வரலாற்று ஆய்வாளர்கள்.

### மெல்ல மெல்ல மாறிய பெண்களின் நிலை

பெண்கள் ஆண்களிடமிருந்து வேறுபட்ட முறையில் நடத்தப்படுவதற்கான முதல் சான்று, பண்டைய மெசபடோமியா நாகரிகத்தில் தென்படுவதாக கூறுகின்றனர் வரலாற்று ஆய்வாளர்கள்.

யேல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மானுடவியலாளரான ஜேம்ஸ் ஸ்காட், விவசாயத்தை அடிப்படையாக கொண்ட ஆரம்பகால சமூகம் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த சமூகத்தில் உயர் வர்க்கத்தினருக்கு, தங்களுக்கான உபரி வளங்களை உற்பத்தி செய்வதற்கும், அரசை பாதுகாக்கவும், போரிடவும் மக்கள் வளம் தேவைப்பட்டது. இந்த வளத்தை அடைவதற்கான நடவடிக்கைகள் குடும்ப அமைப்பின் மீது தவிர்க்க முடியாத அழுத்தத்தை ஏற்படுத்தியது. காலப்போக்கில் இளம் பெண்கள் அதிக குழந்தைகளை பெற்று தருவதில் கவனம் செலுத்த பணிக்கப்பட்டனர்.



அமெரிக்க வரலாற்று ஆசிரியர் கெர்டா லெர்னாரின் ஆவணப் பதிவுகளின்படி, "வேலை மற்றும் தலைமைத்துவத்தில் பெண்களின் பங்கு வரலாற்றில் படிப்படியாக மறைந்து, குழந்தைகளைப் பெற்றெடுப்பதற்கும் வீட்டு வேலைகள் செய்வதற்கும் அவர்கள் நிர்பந்திக்கப்பட்டனர்.

தந்தை வழி திருமண நடைமுறையுடன் இணைந்த இந்த மாற்றத்தில் பெண் பிள்ளைகள் தங்களது குழந்தைப் பருவத்தில் வளர்ந்த தாய் வீட்டில் இருந்து வெளியேறி, திருமண பந்தம் என்ற பேரில் எதிர்காலத்தில் கணவரின் குடும்பத்துடன் வாழ நேர்ந்தது. பெண்களை அவர்களின் கணவர்கள் தங்களின் சொத்தாகவே கருதும் நிலை உருவானது" என்று லெர்னாரின் ஆவணங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

(09ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் தேசியம் ஒரு தோல்வி வாதமா?

யதீந்திரா

சில தினங்களுக்கு முன்னர் விக்கினேஸ்வரன் கூறியதான ஒரு தகவல் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது. அதாவது, விக்கினேஸ்வரன் ஒருவரின் சாதியை கேட்டதாகக் கூறி, அவர் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஒரு படித்த மனிதர் இவ்வாறு கேட்கலாமா - இவரை அரசியலுக்கு கொண்டுவந்தவர்கள் தவறிழைத்துவிட்டனர், என்றவாறு விக்கினேஸ்வரனை பலரும் சமூக ஊடங்களில் விமர்சித்திருந்தனர். ஆனால் விக்கினேஸ்வரன் தான் சாதியை கேட்டதை மறுக்கவில்லை. அது பல வருடங்களுக்கு முன்னர் தனிப்பட்ட உரையாடல் ஒன்றின் போது, கேட்கப்பட்ட விடயம், இப்போது அரசியல் நோக்கத்திற்காகவே அது தொடர்பில் பேசுகின்றனர் - என்று விக்கினேஸ்வரன் பதிலளித்திருக்கின்றார்.

இந்த இடத்தில் எழும் கேள்வி. ஒரு வேளை விக்கினேஸ்வரன் வெளிப்படையாக கேட்காமல், மற்றவர்களை போன்று, சாதிய மேலாதிக்க எண்ணத்தை தலைக்குள் பாதுகாத்துக் கொண்டு, உதட்டளவில் சமதர்மம் பேசியிருந்தால், அவர் ஒரு சிறந்த தமிழ் தேசியவாதிக்கான தகுதியை பெற்றிருப்பாரா? விக்கினேஸ்வரன் மேட்குடித்தனமானவர் - அவரிடம் மேலாதிக்க சிந்தனை இயல்பாகவே இருக்கின்றது, என்றெல்லாம் இப்போது பேசப்படுகின்றது. ஆனால் அவ்வாறான ஒருவரை முன்னிறுத்தியே தமிழ் தேசிய அரசியலை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதற்கு பலரும் முயன்ற கதையை நாம் எவ்வாறு இலகுவாக மறந்துவிட முடியும்? விக்கினேஸ்வரன் வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்த காலத்தில், அரசர்கள் வெளியில் வருகின்ற போது, ஒரு காவலாளி ஆலாவட்டத்துடன் வருவது போன்று, ஒருவர் குடையுடன் வருவார்.

விக்கினேஸ்வரன் மேடைகளில் பேசுகின்ற போது, அவருக்கு குடை பிடித்தவாறு ஒருவர் மேடையில் நிற்பார். இவற்றை எவருமே தவறாக நோக்கவில்லை. எந்தத் தமிழ் தேசியவாதியும் கண்டிக்கவில்லை. இப்படியான விக்கினேஸ்வரனை தலைவராகக் கொண்டே, தமிழ் மக்கள் பேரவையின் மூலம் தமிழ் தேசிய இயக்கமொன்றை கட்டியெழுப்ப முடியுமென்று பலரும் நம்பினர். அதாவது, விக்கினேஸ்வரன் எப்படியும் இருந்துவிட்டுப் போகட்டும், எங்களுக்கு, தமிழ் தேசியத் தேரை இழுப்பதற்கு ஒரு முகம் தேவைப்படுகின்றது. அதற்கு விக்கினேஸ்வரனை பயன்படுத்திக் கொள்வோம். இந்த அடிப்படையில்தான் விக்கினேஸ்வரன் பலரது தெரிவானார். இதுவே மறுபுறமாக விக்கினேஸ்வரனின் பலமாகவும் இருந்தது. விக்கினேஸ்வரனை ஈழத்து தலைலாமா என்று சொன்னவர்களும் உண்டு. விக்கினேஸ்வரனின் தலைமையில் ஒரு வலுவான மாற்றுத் தலைமைத்துவத்தை உருவாக்க முடியுமென்று நம்பிச் செயற்பட்டவர்களும் உண்டு. ஆனால் ஒரு கட்டத்தில் விக்கினேஸ்வரன் தங்களின் கற்பனைகளுக்கு அதிக தூரத்திலிருக்கின்றார் என்பதை கண்டு கொண்ட போது, பலரும் விக்கினேஸ்வரன் மாயையிலிருந்து வெளியேறிவிட்டனர்.

விக்கினேஸ்வரன் கேட்டதாகச் சொல்லப்படும் சாதிக் கதையானது, நம் மத்தியிலுள்ள பலருக்கும் பொருத்தமானது. பலரும் விக்கினேஸ்வரன் வெளிப்படையாகக் கேட்டதைத்தான், தங்கள் மத்தியில் காதும்காதும் வைத்தாற்போல், முணுமுணுத்துக் கொள்கின்றனர். விக்கினேஸ்வரனை அரசியலுக்கு கொண்டுவந்த சம்பந்தனும் சாதித்தடிப்பில் ஊறிப்போன ஒருவர்தான். சம்பந்தனுக்கு வாக்களித்த நகரசுத்தித் தொழிலாளர் ஒருவரின் வீட்டில் சம்பந்தனை நீர் அருந்தச் சொல்லுங்கள் - நான் இந்த அரசியல் ஆய்வுத்துறையை விட்டே வெளியேறுகின்றேன். எனவே பலரும் தங்களை சுற்றியிருப்பவர்களிடம் கேட்கும் கதையைத்தான், விக்கினேஸ்வரனும் சாதாரணமாக கேட்டிருக்கின்றார். ஆனால் மெல்லுவதற்கு விக்கினேஸ்வரன் கிடைத்ததும் தங்களை உத்தமர்கள் போல் காண்பித்துக்கொள்ள பலரும் முயற்சிக்கின்றனர். தமிழ் சமூகம் சாதிய அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட ஒரு சமூகம்தான். இந்த சமூக அமைப்பிலிருந்து அரசியலுக்கு வருபவர்கள் எவ்வாறு இந்தக் கட்டமைப்பிலிருந்து தங்களை தூரத்தள்ளி வைப்பார்களென்று எதிர்பார்க்க முடியும்? தமிழ் தேசிய அரசியல் மிதவாத கட்சிகளான தமிழரசு கட்சி பின்னர், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் கட்டுப்பாட்டிலிருந்த காலத்தில், தமிழ் தேசிய அரசியலை தீர்மானித்த அனைவருமே, சாதிய நிலையில் உயிரடுக்கினராக தங்களை கருத்திக் கொண்டவர்கள்தான்.



தமிழ் தேசிய அரசியலானது சாதிகளை கடந்த ஒரு விடயமென்று கூறிக்கொண்டாலும் கூட, அரசியல் பதவிநிலைகள் சாதியத்தை கடந்த ஒன்றாக இருக்கவில்லை. தமிழ் தேசிய அரசியல் இளைஞர்களின் கட்டுப்பாட்டிற்குள் வந்த பின்னர்தான், இந்த நிலைமையில் உடைவுகள் ஏற்பட்டன. குறிப்பாக அன்றைய சூழலில் இடதுசாரித்துவ சிந்தனையை முன்னிலைப்படுத்திய இயக்கங்களான, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்) மற்றும் ஈழ புரட்சிகர மாணவர் அமைப்பு (ஈரோஸ்) போன்ற இயக்கங்கள் இன விடுதலையோடு இணைந்து, சமூக விடுதலைக்கான சிந்தனைகளையும் முன்வைத்தன. இயக்கங்களின் வரவின் பின்னர்தான் சமானியர்களும் அரசியலுக்குள் பிரவேசிக்க முடிந்தது.

விடுதலைப் புலிகள் இயக்கம் சமூக விடுதலை சிந்தனைகளை முன்னிலைப்படுத்திய, ஒரு இயக்கமாக இருக்காவிட்டாலும் கூட, தங்களுடைய கட்டமைப்பில் சாதிய படிநிலைகளில் கீழ் நிலையிலிருந்த சமூகங்களை சேர்ந்தவர்களுக்கு முக்கிய இடங்களை வழங்கியதன் ஊடாக, யாழ்ப்பாணிய வெள்ளாள மேலாதிக்க சிந்தனைப் போக்கின் செவிப்பறையில் அடிக்க முயற்சித்தனர். விடுதலைப் புலிகளின் முக்கிய பொறுப்புக்கள் பலவற்றில் சாதிய படிநிலையில் குறைவான பிரிவுகளை சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டனர். விடுதலைப் புலிகள் காலத்தில்தான், அவ்வாறானவர்கள் அதிகாரத்திலிருக்க முடிந்தது. பிரபாகரன் வெள்ளாளர் அல்லாத சமூகத்தை சேர்ந்தவர். பிரபாகரனையும் ருகுணு விஜயவீரவையும் ஒப்பிட்டு, போக்குணம்மிக்க கராவ சமூகத்தை சேர்ந்தவர்களென்று கட்டுரைகளும் எழுதப்பட்டிருக்கின்றன. தமிழ் தேசிய அரசியல் வரலாற்றில் வெள்ளாளர் சமூகத்திற்கு வெளியில், ஒருவர் தமிழ் மக்களுக்கான ஏகபோக தலைவராக இருந்த சந்தர்ப்பம் பிரபாகரன் காலத்தில் மட்டும்தான் நிகழ்ந்தது. பிரபாகரனுக்கு முன்னரும் நிகழவில்லை அதற்கு பின்னரும் நிகழவில்லை. உண்மையில் ஜனநாயக அரசியல் தளத்தில் பிரபாகரன் போன்ற பின்புலம் கொண்ட ஒருவர், ஒருபோதுமே தமிழ் மக்களின் தலைவராக இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் அவ்வாறானதொரு நிலைமை இதுவரையில் நிரூபிக்கப்படவில்லை. இந்தக் கட்டுரையாளரின் வாதத்தை கேள்விக்குள்ளாக்க வேண்டுமாயின், அது நிரூபிக்கப்பட வேண்டும். பிரபாகரனுக்கு அவ்வாறானதொரு இடத்தை சமூகம் வழங்கவில்லை. ஆயுத பலத்தின் மூலம் அவ்வாறானதொரு சூழலை அவர் ஏற்படுத்தியிருந்தார். விரும்பியோ விரும்பாமலோ அவரை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்பந்தம் அனைவருக்கும் ஏற்பட்டது.

ஆனால் என்னதான் இயக்கங்கள் சமூகத்தின் மத்தியில் உடைவுகளை ஏற்படுத்தியிருந்தாலும் கூட, சமூக தளத்தில் சாதியவாதம் நீறுபூத்த நெருப்பாக இருந்து கொண்டேயிருந்தது. இயக்கங்களால் ஏற்படுத்தப்பட்ட உடைவுகள் சமூகதளத்தில் சிந்தனை மாற்றமாக பரிணமிக்கவில்லை. யாழ்வைதீக சிந்தனைப் போக்கில் பெரியளவில் உடைவுகள் ஏற்படவில்லை. விடுதலைப் புலிகளின் வீழ்சியை தொடர்ந்து, அவர்கள் செயலின் மூலம் ஏற்படுத்த முற்பட்ட மாற்றங்கள் அனைத்தும் புஸ்வானமாகிவிட்டது. புளொட் இயக்கத்தின் செயலதிபர் உமா மகேஸ்வரன் கூறியது போன்று, யாழ்ப்பாண வெள்ளாள சமூகம் குளிரூட்டியில் கவனமாக பாதுகாத்து வைத்திருந்த சாதிய மேலாதிக்க சிந்தனைகள் இப்போது மீண்டும் துளிர்விடத் தொடங்கிவிட்டது.

ஆனால் முன்னர் காணப்பட்டது போன்ற நிலையில் இப்போது சாதிய கட்டமைப்பு வலுவாக இருப்பதாக கூறவிடமுடியாது. அதில் உடைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு காலத்தில் ஒருவரின் சாதியை குறிப்பிட்டு அவரை ஒடுக்க முற்படும், உதாசீனப்படுத்த முற்படும் வேலையை இப்போது எவராலும் செய்ய முடியாது. ஏனெனில் சாதிய படிநிலைகளில் கீழ்நிலையில் இருப்பதாக கூறப்பட்டவர்கள் புலப்பெயர்வின் மூலமும், கல்விப் பின்புலங்களாலும் தங்களை உயர்த்தியிருக்கின்றனர். பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைந்திருக்கின்றனர். அவ்வாறானவர்களை முன்னரைப் போல் இலகுவாக புறம்தள்ள முடியாது. ஆனால் அரசியலில் சாதிய மேலாதிக்கம் வெளிப்படையாக இல்லாவிட்டாலும் கூட, மறைமுகமாக ஏதோவொரு வகையில் தொடரத்தான் செய்கின்றது.

ஒரு பெரும் விடுதலைப் போராட்டம் நிகழ்ந்ததாக கூறப்படும் சூழலில், சாதிய மேலாதிக்க மனோபாவத்தை கடந்துசெல்ல முடியாமல் இருக்கின்றதென்றால், இதுவரை காலமும் முன்னிலைப்படுத்தப்பட்ட தமிழ் தேசிய வாதம் தோல்வியடைந்துவிட்டது என்னும் முடிவுக்கே நாம் வரவேண்டும். தமிழ் தேசியவாதம் ஒரு முற்போக்கு வாதமாக பரிணமிக்கவில்லை. அது வெறும் அரசியல் சுலோகமாகவே நிலைபெற்றிருக்கின்றது. சமூகத்தின் பாகுபாடுகளை சிதைத்து, மேலெழும் ஒரு மந்திரச் சொல்லாக தமிழ் தேசியவாதம் எழுச்சியுறவில்லை. இதன் விளைவாகவே, இப்போதும் சாதியம் தொடர்பில் விவாதிக்கக் கூடிய நிலைமை தமிழ்ச் சூழலில் காணப்படுகின்றது. இதற்கு மதில் மேல் பூனையாக வாழும் ஆய்வாளர்கள், புத்திஜீவிகள் என்போரும் ஒரு காரணமாவர். ஏனெனில் அரசியல்வாதிகள் உச்சரிக்கும் தமிழ் தேசியத்தையே சரியானதொரு வாதம்போன்று ஆய்வாளர்கள் என்போரும் பிரதிசெய்ய முற்படுகின்றனர்.

உண்மையில் இன்று உச்சரிக்கப்படும் தமிழ் தேசியம் பெரும்பாலும் யாழ்ப்பாணத்திற்குள் சுருங்கிப்போன வாதமாகவே இருக்கின்றது. யாழ்ப்பாணத்திற்கு வெளியில், இதற்கு பெரியளவில் மக்கள் கவர்ச்சியிருப்பதாக தெரியவில்லை. ஒரு பலமான புலம்பெயர் சமூகமிருப்பதால், ராஜதந்திரிகள், கொழும்பு அரசியல்வாதிகள் அடிக்கடி யாழ்ப்பாணத்திற்குச் செல்வதாலும் அனைத்தும் தங்களை சுற்றியே வட்டமிடுவதான மாயத் தோற்றமொன்றுக்குள் பலர் சிக்கியிருக்கின்றனர். ஆனால் பலரும் காணத் தவறுகின்ற விடயமொன்றுண்டு. அதாவது, ஏனைய மவாட்ட மக்கள் தமிழ் தேசிய அரசியல் சுலோகத்திலிருந்து விலகிக்கொண்டு செல்கின்றனர்.

உதாரணமாக யாழ்ப்பாணத்தில் பேசப்படும் விடயங்கள் எதனையும் ஏனைய மாவட்டங்களிருப்பவர்கள் கருத்தில்கொள்ளவில்லை. ஏன் ஆகக் குறைந்தது யாழ்ப்பாணத்திலிருக்கும் சாதாரண மக்களும் இவைகள் தொடர்பில் அலட்டிக்கொள்ளவில்லை. உண்மையில் இன்றைய தமிழ் தேசிய சுலோகம் பெருமளவு மக்களுக்கு அன்னியமான ஒன்றாகவே காட்சியளிக்கின்றது. சில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் செயற்கையாக சில எதிர்ப்புக்களை ஏற்படுத்துவதன் ஊடாக, தமிழ் தேசியத்திற்கு உயிரூட்டலாமென்று எண்ணுகின்றனர். முன்னரைப் போன்று, சிங்கள எதிர்ப்பை முன்னிலைப்படுத்தி தமிழ் தேசிய அரசியலுக்கு உரமூட்ட முடியாது. அந்தக் காலம் மலையேறிவிட்டது. விடயங்களை அறிவுபூர்வமாக அணுகுவதன் ஊடாகவே இன்றைய சவாலை எதிர்கொள்ள வேண்டும்.

சிங்கள ஆளும் வர்க்கம் அதன் நகர்வுகளை திறம்பட செய்து கொண்டேயிருக்கின்றது. சிறிய விடயங்களில் தமிழ் அரசியல்வாதிகளின் கவனத்தை சிதறடித்துவிட்டு, நீண்டகால நோக்கிலான நகர்வுகளை காதும் காதும் வைத்தாற்போல் நகர்த்திக் கொண்டிருக்கின்றனர். திருகோணமலையை அடிப்படையாகக் கொண்டு, பல்வேறு நகர்வுகள் இடம்பெறவுள்ளது. ஆனால் தமிழ் அரசியல்வாதிகளோ, புத்தர் சிலையை தாண்டி சிந்திக்கத் தெரியாதவர்களாக இருக்கின்றனர். காலப்போக்கில் சாதியபடிநிலைகளில் - கீழ்நிலையில் இருப்பதாக கூறப்படும் மக்கள் பிரிவொன்று, புத்தரையும் தங்களுடைய விடுதலைக்கான மார்க்கமாக கூறினாலும் கூட, ஆச்சரியப்படுவதற்கில்லை.

●

# மனித வரலாற்றில் ஆணாதிக்கம்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா, சீனா போன்ற ஆணாதிக்க நாடுகளில், இளம் பெற்றோர் ஆண் குழந்தைகளை விரும்பி பெற்றுக்கொள்ளும் போக்கு இன்றும் உள்ளது.

வெகுஜன மக்களின் இந்த மனநிலை பெண் குழந்தைகளை கருவிலேயே கலைக்கும் எண்ணத்திற்கு வழிவகுத்தது. 2011 இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, சராசரியாக 100 பெண்களுக்கு 111 ஆண் குழந்தைகள் உள்ளனர்.

### கட்டாய திருமணம்

ஆணாதிக்க திருமணங்களின் மூலம் பெண்கள் சுரண்டப்படும் போக்கும் தொடர்கிறது. ஆணாதிக்கத்தின் தீவிர வடிவமாக கட்டாய திருமணம் கருதப்படுகிறது.

2021ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு மதிப்பீட்டின்படி, உலகளவில் 22 மில்லியன் பேர் கட்டாய திருமண பந்தத்தில் வாழ்ந்து வருவதாகத் தெரிய வந்துள்ளது.

ஆண்கள் இயற்கையாகவே வன்முறை மற்றும் போருக்கு ஏற்றவர்கள் என்ற கருத்தும், பெண்கள் குடும்பத்தை அக்கறையுடன் கவனித்துக் கொள்ளவும், குழந்தைகளைப் பெற்றெடுத்து வளர்ப்பதற்கும் உரியவர்கள் என்ற கற்பிதமும் உலக அளவில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

ஆனால் சமூகத்தின் உயர் வர்க்கத்தில் உள்ளவர்களுக்கு சேவை செய்வதை நோக்கமாகக் கொண்டே இந்த ஆணாதிக்க கருத்துகள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

இந்த கட்டமைப்புகள், 1920களில் லண்டன் மிருகக்காட்சி சாலையில் உள்ள மங்கி ஹில்லை போல, ஒரு சிதைந்த சமூக அமைப்புக்கே வழி வகுக்கிறது. ஆனால் மனிதனால் உருவாக்கப்பட்ட இந்த சமூகத்தை மனிதர்களால்தான் மறுசீரமைக்க முடியும்.

●




## வெருகல் பிரதேச பாடசாலைகளில் கற்றல் உபகரணங்கள் வழங்கல்

திருமலை, ஜூன் 08

திருகோணமலை வெருகல் பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் வட்டுவான் வித்தியாலயம், திருவள்ளுவர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்கும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்று முன் தினம் வெருகல் பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

திருகோணமலை மாவட்ட செயலக பிரதம கணக்காளர் பரமேஸ்வரனின் கோரிக்கைக்கு அமைவாக உலக சுகாதார ஸ்தாபனத்தில் கடமையாற்றும் குணாளன் என்பவரின் முயற்சியின் பயனாக மறைந்த சுரேஸ் குமாரின் நினைவாக கந்தையா தொண்டு நிறுவனத்தினால் இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. சுமார் 47 மாணவ மாணவிகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## புயல் காற்று வீசக்கூடும்!

கொழும்பு, ஜூன் 08

தென்கிழக்கு அரபிக்கடல் பகுதியில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் நேற்று நள்ளிரவில் படிப்படியாக புயலாக உருவாகி வடமேற்கு திசையை நோக்கி நகரும் என வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த கடற்பரப்புகளில் காற்றின் வேகம் மணிக்கு 60 முதல் 70 கிலோமீற்றர் வரையில் வீசக்கூடும் எனவும் காற்றின் வேகமா னது அவ்வப்போது மணித்தியா லத்திற்கு 75 முதல் 80 கிலோமீற் றர் வரை அதிகரிக்கலாம் எனவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மேற்குறிப்பிட்ட கடற்பரப்புகளில் கடற்றொழில் மேற்கொள்ளும் கடற்றொழிலாளர்கள் மற்றும் கடல்சார் சமூகத்தினர் உடனடியாக கரைக்கு அல்லது பாதுகாப்பான இடத்திற்கு வருமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் கூறியுள்ளது. (அ)



## தென்கிழக்கு பல்கலையில் உலக சுற்றாடல் தின நிகழ்வு

அம்பாறை, ஜூன் 08

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலைகலாசார பீடத்தின் புவியியற்துறையினால் உலக சுற்றாடல்தினமானது கலைகலாசார கேட்போர் கூடத்தில் புவியியற்துறைத் தலைவர் கே.நிஜாமிர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கை தென்கிழக் குப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஏ. றமீஸ் அபூபக்கர் கலந்து, சிறப்பித்தார். இந்நிகழ்வில் விசேட அதிதி யாக கலைகலாசார பீடத்தின் பீடாதிபதி எம்.எம். பாசில் கலந்துகொண்டதோடு துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர் கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

## கிழக்கு மாகாண அபிவிருத்தி குறித்து ஆளுநருடன் தௌபீக் எம்.பி. ஆராய்வு

திருமலை, ஜூன் 08

கிழக்கு மாகாண அபிவிருத்தி, மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை, காணிப் பிரச்சினை, வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தவேண்டும் என்று திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் மாகாண ஆளுநரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கொழும்பிலுள்ள தலைமைக் காரியாலயமான சௌமிய பவனில் இது தொடர்பான கலந்துரையாடல் இடம் பெற்றது.

மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுடன் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் ஆகியோர்களுக்கிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, அனைத்து தரப்பினருடனும் இணைந்து பணியாற்றக்கூடிய ஒருவர் கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டிருப்பது மிக மகிழ்ச்சியளிப்பதாகவும், அவ்வாறான ஒருவரை கிழக்கு மக்கள் முழுமையாக ஆதரிப்பதாவும் பாராளுமன்ற உறுப்பினர் இதன்



போது தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில், அமைச் சர் ஜீவன் தொண்டமான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ராமேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (அ)







# முறக்கொட்டாஞ்சேனை படை முகாம் காணியில் ஒரு பகுதி 32 ஆண்டுகளுக்கு பின்னர் விடுவிப்பு!

மட்டக்களப்பு, ஜூன் 08

**மட்டக்களப்பு - முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாம் அமைந்துள்ள தனியாருக்கு சொந்தமான காணிகள் 32 வருடங்களின் பின்னர் நேற்று முன்தினம் திகதி விடுவிக்கப்பட்டுள்ளது.**

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக படையினர் வசம் இருந்து வந்த தனியார் காணிகள் மட்டக்களப்பு மாவட்டத்திலும் விடுவிக்கப்பட்டு வந்த நிலையில், அதன் ஒரு கட்டமாக மட்டக்களப்பு - முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாம் அமைந்திருந்த காணியின் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டுள்ளது.

தனியாருக்குச் சொந்தமான 8.6 ஏக்கர் காணியே கிழக்கு மாகாண கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ ஹெட்டியாராட்சியினால் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.கலாமதி பத்ராஜாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து காணி உரிமையாளர்களை இனங்கண்டு உரியவர்களிடம் காணிகளை ஒப்படைக்கும் தொடர் நடவடிக்கைக்காக மாவட்ட அரசாங்க அதிபரினால் கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர்




எஸ்.ராஜ்பாபுவிடம் காணி ஒப்படைக்கப்பட்டது.

59 தனிநபர்களுக்கு சொந்தமான காணிகளே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நவரூபரஞ்ஜினி முகுந்தன், 231 ஆவது இராணுவ படைப்பிரிவின் பிரிக்கேட் கொமாண்டர் தீலுப பண்டார, கட்டளைத் தளபதி மேஜர் இசுறு சேனாநாயக்க, வாழைச்சேனை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர், பிரதேசத்துக்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர் உள்ளிட்ட காணியின் உரிமையாளர்கள் பலரும் கலந்துகொண்டனர். (அ)



# அமைச்சர் அலி சப்ரியை சந்தித்த கிழக்கு ஆளுநர்!

திருமலை, ஜூன் 08

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலின் போது சுற்றுலா, மீன்வளத்துறை, கனிம மணல் மற்றும் விவசாயம் போன்ற பல்வேறு துறைகளில் வெற்றிகரமாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் நாடுகளின் நிபுணத்துவத்தைப் பெற்றுக் கொள்வது தொடர்பில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் எடுத்துரைத்தது டன் அது தொடர்பான கோரிக்கையை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியிடம் முன்வைத்தார்.

ஆளுநரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்றுக்கொண்ட வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, அதற்கு சாதகமான பதிலையும் வழங்கினார். (அ)

# மின்சாரமின்றி இருக்கும் குடும்பங்களுக்கு விசேட கவனம் செலுத்த ஆளுநர் பணிப்பு!



திருமலை, ஜூன் 08

கிழக்கு மாகாணத்தில் மின்சாரமின்றி 15 ஆயிரம் குடும்பங்கள் வசித்து வருவதாகவும், அவர்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான பொறிமுறைகளைச் சமர்ப்பிக்குமாறும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இலங்கை மின்சார சபையின் கிழக்கு மாகாண பிரதி பொது முகாமையாளர் மற்றும் அதிகாரிகளுடனான கலந்துரையாடல் கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது. இதன் போதே அவர் இந்த பணிப்புரையை வழங்கினார்.

காற்றுமின்சாரம், சூரிய ஆற்றல், நீர் மின்சாரம் போன்றவற்றை புதுபிக்கத்தக்க ஆற்றல் வளங்களைக் கொண்டு, முழுமையாக இயங்கக்கூடிய மின்சாரத்தை வழங்கும் எமது நாட்டிலுள்ள மாகாணங்களில், முதல் மாகாணமாக கிழக்கு மாகாணத்தை மாற்றுவதற்கான ஆய்வை மேற்கொண்டு, அதற்கான ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு மின்சார சபைக்கு ஆளுநர் வலியுறுத்தினார். (அ)

# நிந்தவூரில் மாட்டிறைச்சி உண்பதற்கு தடையில்லை

நிந்தவூர், ஜூன் 08

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் விற்பனை செய்யப்படும் மாட்டிறைச்சியை உண்பதற்கு எவ்வித தடையும் இல்லை எனவும் பொது மக்கள் இறைச்சி உண்பதில் பீதி அடையத் தேவையில்லை எனவும் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.எல்.எம். நயீஸ் தெரிவித்துள்ளார்.

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றுகையில் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

நாட்டின் வேறு சில மாவட்டங்களில் மாடுகளுக்கு வைரஸ் நோய் பரவிவரும் தகவல் வெளியானதையடுத்து நிந்தவூர் பிரதேசத்திலும் மாட்டிறைச்சி விற்பனையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில் பொதுமக்கள் பெரும் அச்ச நிலையிலும் உள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் நிந்தவூர் பிரதேச சபை செயலாளர் திருமதி. ரி.பரமேஸ்வரன் மற்றும் நிந்தவூர் அரச கால் நடை வைத்திய அதிகாரி டாக்டர் யூ. சுதீஸ்வரன் உட்பட மாட்டிறைச்சி விற்பனையாளர்கள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் நயீஸ் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்-

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், அரச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் பிரதேச சபை ஆகிய மூன்று நிறுவனங்களும் இணைந்து மிகுந்த கண்காணிப்புடன் இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுவதனை உறுதி செய்து வருகின்றது.

எனவே, நுகர்வோருக்கு நோய்த்தொற்று அற்ற மாட்டு இறைச்சி கிடைப்பதனை உறுதி செய்துள்ள நிலையில் எமது பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இந்த விடயத்தில் மிகவும் அவதானத்துடனும் கண்காணிப்புடனும் செயற்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் வெளி மாவட்டங்களில் இருந்து மாடுகளை இங்கு கொண்டு வருவதற்கும் இங்கிருந்து மாடுகளை வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் சந்தேகிக்கப்படும் வைரஸ் நோய் பரவலை வெகுவாக கட்டுப்படுத்தலாம்.

எனவே, நிந்தவூர் பிரதேச பொது மக்கள் மாட்டிறைச்சி நுகர்வது தொடர்பில் எவ்வித பீதியும் அடையத்தேவையில்லை என்பதனை உறுதி செய்கின்றோம்-என்றார். (அ-06)

# முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தோமஸ் தங்கத்துரை காலமானர்

நிந்தவூர், ஜூன் 08

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வில்லியம் தோமஸ் தங்கத்துரை காலமானர்.

இலங்கைத் தமிழ்ரசுக் கட்சியின் முன்னாள் உபதலைவரான இவர் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக விருந்த க.பத்மநாதன் கலமான பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்தையடுத்து பாராளுமன்றம் சென்றவராவார்.

மருத்துவரான இவர் போர்ச்சூழல் நிலவிய காலத்தில் பிரஜைகள் குழுவில் இணைந்து பணியாற்றியதுடன் கல்முனைப் பிரதேசத்திலுள்ள பல்வேறு சமூக நல அமைப்புக்களில் இணைந்து சமூக நலப் பணியிலும் ஈடுபட்டவர்.

துறை நீலாவணைக் கிராமத்தை பூர்வீகமாகக் கொண்ட இவர் பாண்டிருப்பில் வசித்து வந்த நிலையில் சிறிது காலம் சுகவீனமுற்றிருந்த நிலையில் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கம் நேற்று புதன்கிழமை பாண்டிருப்பில் இடம்பெற்றது. (அ-06)





# காரைதீவு கண்ணகை அம்மன் ஆலய வைகாசி திருக்குளிர்த்தி பாடும் சடங்கு

காரைதீவு, ஜூன் 08

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த வைகாசி திருக்குளிர்த்தி சடங்கின் இறுதி நிகழ்வான குளிர்த்தி பாடும் சடங்கு நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை பக்திபூர்வமாக சிறப்பாக நடைபெற்றது.

இம் முறை வைகாசி திருக்குளிர்ச்சி சடங்கு கடந்த மூன்று வருடகாலத்தைவிட ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

அதிகாலை 4 மணியளவில் சடங்கு பூசையும் திருக்குளிர்த்தி பாடலும் ஆரம்பமாகி காலை 5.30 மணியளவில் நிறைவுற்றது.

கடந்த 29 ஆம் தேதி கல்யாணக்கால் நடுதலுடன் ஒருவார காலமாக பறை மேளம் குழல் ஒலிக்க, கப்புகன்மார் முன்னிலையில், உடுக்கை ஒலியுடன் பக்தர்களின் அரோஹரா கோஷம் குரவை ஒலிக்கு மத்தியில் பகலில் பச்சை கட்டல் இரவில் ஊர்சுற்றுக்காவியம் பாடல் இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 12ஆம் திகதி எட்டாம் சடங்கு பூசை இடம்பெறும்.

இந்நிகழ்வுகள் அனைத்தும் பண்டைய கலாசார பாரம்பரிய முறைப்படி நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு



# ஆப்கானிஸ்தானில் விஷம் வைத்து கொலை செய்யப்பட்ட 80 சிறுமிகள்!



காபூல், ஜுன் 08

**ஆப்கானிஸ்தானில் சுமார் 80 சிறுமிகள் விஷம் வைத்து கொலை செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

**ஆப்கானிஸ்தானின் சர் அபுல் மாகாணத்தின் சங்கராக் மாவட்டத்தில் உள்ள இரண்டு ஆரம்பப் பாடசாலைகளில் இந்த சம்பவம் நடந்துள்ளது.**

இந்த சம்பவத்திற்கான காரணங்கள் இன்னும் தெரியவில்லை. இந்த கொடூரமான செயலை ஒரு தனி நபர் செய்ததாக அதிகாரிகள் கருதுகின்றனர்.

சிறுமிகள் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக கல்வித்துறை அதிகாரி முகமது ரஹ்மானி தெரிவித்தார்.

இந்த சம்பவத்தில் கொலையாளி பயன்படுத்திய விஷம் என்னவென்று கண்டறியப்படவில்லை. சிறுமிகள் சிகிச்சை பெற்று வருவது குறித்தும் எந்த தகவலும் வெளியாகவில்லை.

எது எப்படி இருந்தபோதிலும் 2021 இல் தலிபான்கள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து, ஆப்கானிஸ்தானில் சிறுமிகள் மற்றும் பெண்கள் மீதான கட்டுப்பாடுகள் அதிகரித்துள்ளன.

பாடசாலைகள், கல்லூரிகளில் பெண்கள் தாக்கப்படுகின்றனர்.

பெண்கள் உயர் கல்வி கற்பதற்கு தலிபான்கள் தடை விதித்துள்ளனர். இதன் காரணமாக பெண்கள் பெரும் அச்சத்திலும் பதற்றத்திலும் மன உளைச்சலிலும் இருப்பதாக கூறப்படுகிறது.

பெண்களுக்கு தலிபான்கள் விதித்துள்ள கட்டுப்பாடுகளால் பெண்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து ஆப்கானிஸ்தானை சேர்ந்த 20 வயதான இளம் பெண் தகவல் வெளியிட்டுள்ளார்.

"எனக்கு இனி வாழ்க்கையில் நம்பிக்கை இல்லை. எங்களைப் படிக்க அனுமதிக்கவில்லை. சுதந்திரமாக வாழ வாய்ப்பு இல்லை.

மனச்சோர்வும் பதட்டமும் என்னை ஆட்டிப்படைக்கின்றன. இந்த வாழ்க்கையை முடித்துக் கொள்ளும் எண்ணங்கள் அடிக்கடி வரும். இந்த வலியை என்னால் தாங்க முடியவில்லை.

யாராவது என் துயரத்தைக் கேட்கவேண்டும் என்று விரும்புகிறேன். இது என் அவல நிலை மட்டுமல்ல. என்னுடன் பல்கலைக்கழகத்தில் படித்த இளம் பெண்கள் அனைவரும் இப்படித்தான் சிந்திக்கிறார்கள்.

தற்கொலை எண்ணங்கள் நிலையானவை. வாழவும் முடியாமல், சாகவும் முடியாமல் தவிக்கின்றோம்" என அந்த இளம் பெண் கூறியுள்ளார்.

(அ)

# ஹெய்ட்டியில் நிலச் சரிவு! 42 பேர் பலி; 11 பேர் மாயம்!



போர்ட்-ஒவ்-பிரின்ஸ், ஜுன் 08

ஹெய்ட்டி நாட்டில் திடீரென ஏற்பட்டுள்ள தொடர் கனமழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் சிக்கி 42 பேர் வரை பலியாகியுள்ளனர். 11 பேரை காணவில்லை. இது பற்றி ஐ.நா. அமைப்பு வெளியிட்ட செய்தியில், கடுமையான கனமழையால் 37 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ளது.

13,400 பேர் தங்களது இருப்பிடங்களை விட்டு புலம்பெயர்ந்து சென்றுள்ளனர். பலருக்கும் உணவு, குடிதண்ணீர் மற்றும் மருந்து உள்ளிட்ட பொருட்கள் அவசர தேவையாக உள்ளது என ஐ.நா. தெரிவித்துள்ளது.

ஹெய்ட்டி நாட்டு அதிகாரிகள் இது குறித்து தெரிவிக்கையில்,

தலைநகர் போர்ட்-ஒவ்-பிரின்ஸ் பகுதியில் இருந்து தென்மேற்கே 40 கிலோமீற்றர் தொலைவில் அமைந்த லியோகனே நகரம் வெள்ளத்திற்கு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், 20 பேர் உயிரிழந்துள்ளனர்-என்றனர்.

தேசிய அவசரகால இயக்கமைய அதிகாரிகளை உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பிரதமர் ஏரியல் ஹென்றி உத்தரவிட்டுள்ளார்.

# உக்ரைன் கார்சன் நகரில் பெரும் வெள்ளப்பெருக்கு

## ரஷ்யாவின் சதி திட்டமா?

கீவ், ஜுன் 08

உக்ரைனின் கார்சன் மாகாணத்தில் கக்ஹொவ்ஸ்கா என்ற அணை உள்ளது. இந்த அணையில் நேற்று முன்தினம் திடீரென உடைப்பு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக டினிப்ரா ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உக்ரைனின் கார்சன் நகரில் பல்வேறு பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

உடைப்பு ஏற்பட்ட அணை ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள உக்ரைனின் பகுதியில் உள்ளது. இதனால், இந்த அணையை உக்ரைன் தகர்த்ததாக ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது.

அதேவேளை, அணையை ரஷ்யா தகர்த்ததாக உக்ரைன் குற்றஞ்சாட்டி வருகின்றது.



இரு நாடுகளுக்கும் இடையே போர் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் உக்ரைனில் உள்ள அணை தகர்க்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அணையை தகர்த்தது யார்? அல்லது அணையில் நீர்மட்டம் அதிகரிப்பால் உடைப்பு ஏற்பட்டதா? என்பது குறித்த முழுமையான தகவல்கள் இதுவரையில் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஒடிசா ரயில் விபத்தில் இறந்துவிட்டார் என்று அறிவித்த மகனை பிணவறையிலிருந்து உயிருடன் மீட்ட தந்தை!

புதுடில்லி, ஜுன் 08

ஒடிசா ரயில் விபத்தில் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்ட மகனைத் தேடி 230 கி.மீ. பயணம் செய்த தந்தை, பிணவறையில் இருந்த அவரை உயிருடன் மீட்டுள்ள நிலையில், தற்போது அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

கடந்த 2ஆம் திகதி ஒடிசா மாநிலம் பாலசோரில் 3 ரயில்கள் அடுத்தடுத்து மோதி விபத்துக்குள்ளாகியதில் 275 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இதையடுத்து, அந்த ரயில்களில் பயணம் செய்தவர்களின் குடும்பத்தினர். தங்களுடைய அன்புக்குரியவர்கள் இறந்தார்களா அல்லது காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறார்களா என கண்டுபிடிக்க பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர்.

அந்த வகையில் மேற்கு வங்க மாநிலம் ஹவுராவில் சிறிய கடை நடத்தி வரும் ஹெலராம் மாலிக் என்பவரின் மகன் விஸ்வஜித் (வயது-24) கொல்கத்தாவிலிருந்து புறப்பட்ட கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயிலில் பயணம் செய்துள்ளார்.

இதனிடையே, விபத்து குறித்த தகவல் அறிந்ததும், ஹெலராம் தனது மகன் விஸ்வஜித்தை தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளார்.

அப்போது, தான் உயிருடன் இருப்பதாகவும் ஆனால் படுகாயம் அடைந்திருப்பதாகவும் உடைந்த குரலில் விஸ்வஜித் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, ஹெலராம் தனது உறவினர் தீபக்தாஸுடன் ஒரு அம்புலன்ஸ் வாகனத்தில் பாலசோர் விரைந்துள்ளார். 230 கி.மீ. பயணத்துக்குப் பிறகு காயமடைந்தவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள மருத்துவமனைகளுக்குச் சென்று விஸ்வஜித்தை தேடியுள்ளார். ஆனால் கண்டுபிடிக்க முடியவில்லை.



இதனிடையே இதுகுறித்து சிலரிடம் விசாரித்தபோது, காயமடைந்தவர் மருத்துவமனைகளில் இல்லையென்றால், சடலங்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள பாஹநாகா உயர்நிலைப் பள்ளிக்குச் சென்று தேடிப் பாருங்கள் என ஒருவர் நம்பிக்கையுடன் கூறியுள்ளார்.

ஆனால் தன் மகன் உயிரிழந்திருப்பார் என அவர்கள் கூறியதை ஹெலராம் ஏற்கவில்லை. எனினும் அங்கு சென்று தேடினார். அப்போது ஒரு உடலில் இருந்து கை அசைவதை ஹெலராம் பார்த்தார். அது வேறு யாருமல்ல. அவருடைய மகன் விஸ்வஜித்தான்.

சடலங்களுக்கு மத்தியில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த தனது மகனை உடனடியாக பாலசோர் மருத்துவமனைக்கு அம்புலன்ஸ் மூலம் அழைத்துச் சென்றார் ஹெலராம். எனினும், கட்டாக் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு விஸ்வஜித்தை அழைத்துச் செல் லுமாறு அங்கிருந்த மருத்துவர்கள் அறிவுறுத்தினர்.

ஆனால், தனது மகனை டிஸ்சார்ஜ் செய்யுமாறு ஹெலராம் கோரிக்கை வைத்தார். பின்னர் தனது மகனை கொல்கத்தாவுக்கு அழைத்துச் சென்று அங்குள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தார்.

அங்கு விஸ்வஜித்துக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. பல்வேறு அறுவைச் சிகிச்சைகள் செய்யவேண்டி உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

அவருடைய உடல்நிலை மோசமாக இருந்தாலும் உயிருக்கு ஆபத்து இல்லை என மருத்துவர்கள் கூறினர்.

(அ)

# ஆப்கானிஸ்தானை சுருட்டி தொடரை வென்றது இலங்கை




அம்பாந்தோட்டை, ஜூன் 08

துஷ்மந்த சாமீர, வனிந்து ஹசரங்கவின் அபாரமான பந்துவீச்சால் 116 ஓட்டங்களுக்கு ஆப்கானிஸ்தான் அணியை சுருட்டிய இலங்கை அணி ஒருநாள் தொடரை 2 - 1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

இலங்கை - ஆப்கானிஸ்தான் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் அம்பாந்தோட்டை சூரியவெவ மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் நடந்தது.

முதல் போட்டியில் ஆப்கானிஸ்தானிடம் தோற்ற இலங்கை இரண்டாவது போடடியில் வெற்றி பெற்றிருந்தது. இந்த நிலையில் வெற்றி - தோல்வியை தீர்மானிக்கும் மூன்றாவது ஒருநாள் போட்டி நேற்று நடந்தது.

ஆப்கானிஸ்தான் நிர்ணயித்த 116 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. பதிலுக்கு ஆடிய இலங்கை அணி 16 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 122 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

ஆரம்ப வீரர்களான பதும் நிஷங்க, திமுத் கருணாரட்ன ஆகிய இருவரும் அரைச்சதங்கள் அடித்ததுடன், 84 ஓட்டங்களைப் இணைப்பாட்டமாக பெற்று அணியின் வெற்றியை இலகுபடுத்தினர்.

அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய பதும் நிஷங்க 34 பந்துகளில் 8 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 51 ஓட்டங்களைப் பெற்றார். திமுத் கருணாரட்ன 7 பௌண்ட்ரிகளுடன் 56 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழக்காதிருந்தார்.

குசல் மெண்டிஸ் ஆட்டம் இழக்காமல் 11 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் குல்பாதின் நயீப் 19 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த ஆப்கானிஸ்தான் மிக மோசமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி 22.2 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 116 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

ஆப்கானிஸ்தான் துடுப்பாட்டத்தில் மொஹமத் நயீப் (23), இப்ராஹிம் ஸத்ரான் (22), குல்பாதின் நயீப் (20) ஆகிய மூவரே 20 ஓட்டங்கள் அல்லது அதற்கு மேல் பெற்றனர்.

துஷ்மந்த சாமீர 64 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கெட்களை வீழ்த்தினார். அவர் முதல் 4 ஓவர்களை சிறப்பாக வீசி 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை வீழ்த்தியபோதிலும் அடுத்த 5 ஓவர்களில் 39 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்களை கைப்பற்றினார்.



## ஆசியக் கிண்ண கிரிக்கெட் பாகிஸ்தான் விலகத் திட்டம்?

லாகூர், ஜூன் 08

இரண்டு நாடுகளில் ஆசிய கிண்ணம் என்ற தங்களால் முன்மொழியப்பட்ட யோசனையிலிருந்து இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் பின்வாங்கியதை அடுத்து போட்டியை நடத்தும் நாடான பாகிஸ்தான் தொடரிலிருந்து விலகக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

3 முதல் 4 போட்டிகளை பாகிஸ்தானிலும் இந்தியா சம்பந்தப்பட்ட போட்டிகளை நடுநிலையான நாட்டிலும் நடத்தலாம் என்ற யோசனையை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முனைவைத்தது.

பாதுகாப்பு காரணங்களுக்காக இந்திய அணி பாகிஸ்தானுக்கு செல்ல மறுத்ததை அடுத்து இந்த யோசனை முன்வைக்கப்பட்டது.

ஆனால், பாகிஸ்தானுக்கு வெளியே போட்டியை நகர்த்துவதற்கான இந்திய கிரிக்கெட் சபையின் உந்துதலை இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகிய 3 நாடுகளும் ஆதரித்தன என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையிலேயே ஆசியக் கிண்ணப் போட்டியிலிருந்து விலகுவதற்கு பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஐ)

## உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பை வெல்லும் அணிக்கு ரூ. 58 கோடி

லண்டன், ஜூன் 07

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் வெல்லும் அணிக்கு 58.5 கோடி (இலங்கை) ரூபாய் பரிசு தொகையுடன் கிண்ணமும் வழங்கப்படும். 2ஆவது இடத்தை இடம் பிடிக்கும் அணி ரூ. 29.25 கோடியை பரிசாக பெறும்.

இதைத்தொடர்ந்து டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் 3 முதல் 5 இடத்தில் உள்ள தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, இலங்கை ஆகிய அணிகளுக்கு முறையே ரூ. 15. 75 கோடி, ரூ. 12. 6 கோடி, ரூ. 7. 2 கோடி பரிசுத்தொகை வழங்கப்படும்.

இதேவேளையில் 6 முதல் 9ஆவது இடத்தில் இருக்கும் நியூசிலாந்து, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ் ஆகிய அணிகளுக்கு தலா ரூ. 3.57 கோடி பரிசாக வழங்கப்படவுள்ளது. (ஐ)






## பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் அரையிறுதியில் சபலெங்கா

பாரிஸ், ஜூன் 08

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடரின் அரையிறுதிக்கு சபலெங்கா, கரோலினா ஆகியோர் முன்னேறினர்.

கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடர் பாரிஸில் நடக்கிறது.

இதில், மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி சுற்றில் 2ஆம் நிலை வீராங்கனையான பெலாரஸின் அரினா சபலெங்கா 6-4, 6-4 என்ற நேர் செற்றில் உக்ரைனின் எலினா ஸ்விட்டோலினாவை வீழ்த்தி அரை இறுதிக்கு முன்னேறினார்.

43ஆம் நிலை வீராங்கனையான செக் குடியரசின் கரோலினா முச்சோவா 7-5, 6-4 என்ற செற் கணக்கில் 333ஆம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் அனஸ்டசியா பாவ்லி சென்கோவாவை தோற்கடித்து அரையிறுதியில் கால் பதித்தார். (ஐ)




## அல் இத்திஹாத் கழகத்தில் இணைந்தார் கரீம் பென்சிமா!

ரியாத், ஜூன் 08

பிரான்ஸ் உதைபந்தாட்ட வீரர் கரீம் பென்சிமா, சவூதி அரேபியாவின் அல் இத்திஹாத் கழகத்தில் இணைந்துள்ளார்.

35 வயதான கரீம் பென்சிமா, இறுதியாக ஸ்பெயினின் றியல் மட்ரிட் கழகத்துக்காக 2009ஆம் ஆண்டு முதல் விளையாடி வந்தார். கடந்த 14 வருடங்களில் அந்தக் கழகத்துக்காக 648 போட்டிகளில் 354 கோல்களை அடித்திருந்தார்.

இந்நிலையில், சவூதி அரேபியாவின் அல் இத்திஹாத் கழகத்தில் விளையாடுவதற்கு 3 வருட காலத்துக்கான ஒப்பந்தத்தில் அவர் கையெழுத்திட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

'பென்சிமா இங்கே. ஒரு புதிய சிங்கம் கர்ச்சிக்கப் போகிறது. இத்திஹாத்துக்கு வரவேற்கிறோம்", என அக்கழகம் தெரிவித்துள்ளது.

அல் இத்திஹாத் கழகம், ஏசியன் சம்பியன்ஸ் லீக் கிண்ணத்தை இரு தடவைகள் வென்ற கழகமாகும். ஆசிய கிண்ணம், அரபு சம்பியன்ஸ் லீக் கிண்ணங்களையும் அக்கழகம் வென்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து இஸ்ரேலுடன் இலங்கை விசேட கலந்துரையாடல்



கொழும்பு, ஜூன் 08

நாட்டின் பாதுகாப்புப் படையினர்களுக்கான பயிற்சி வாய்ப்புக்களை மேலும் மேம்படுத்துவது குறித்து இஸ்ரேல் பிரதிநிதிகளுடன் பாதுகாப்புச் செயலர் ஜெனரல் கமால் குணரத்ன கலந்தாலோசித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் இலங்கைக்கு இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரித்தல் மற்றும் இராணுவத்தினருக்கு பயிற்சி வாய்ப்புக்களை மேலும் மேம்படுத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக இரு நாடுகளுக்குமிடையில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

புதுடில்லியில் உள்ள இஸ்ரேலிய தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கேணல் அவிஹாய் சப்ரானி கடந்த திங்கட்கிழமை பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமால் குணரத்னவை பாதுகாப்பு அமைச்சில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போதே இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சி வாய்ப்புகளை மேலும் மேம்படுத்துவது மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் இராணுவ ஒருங்கிணைப்பு அதிகாரி பிரிகேடியர் தம்மிக்க வெலகெதர உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் கலந்து கொண்டனர். (அ)




எலாயன்ஸ் பினான்ஸ் நிறுவனத்தின் வருடாந்த 10 லட்சம் மரக்கன்றுகள் நாட்டும் திட்டத்தின் ஒரு பகுதியாக சங்கானை கிளையின் ஏற்பாட்டில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை புங்குடுதீவு பிரதேசத்தில் மரம் நாட்டு விழா நடைபெற்றது. இதில் தீவக வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.பவானந்தன் மற்றும் மத தலைவர்கள், கிராம மட்ட அமைப்புக்கள்,ஆசிரியர்கள் கலந்து சிறப்பித்தனர்.

# வடக்கு-கிழக்கில் விகாரை அமைப்பதை நிறுத்துவது குறித்து இன்னும் முடிவில்லை

## கூறுகின்றது தொல்லியல் திணைக்களம்

கொழும்பு, ஜூன் 08

வடக்கு-கிழக்கில் புதிதாக பௌத்த விகாரைகளை அமைப்பதை நிறுத்துவது தொடர்பாக இறுதி முடிவொன்று எடுக்கப்படவில்லை என்று தொல்லியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நிலங்களை கையகப்படுத்துதல் மற்றும் புதிய பௌத்த விகாரைகளை அமைத்தல் போன்ற நடவடிக்கைகளை நிறுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் உத்தரவொன்றை விடுத்திருந்தார்.

இந்த நிலையில், இதுதொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்க, இந்த விடயம் தொடர்பாக இதுவரை இறுதி முடிவொன்று எட்டப்படவில்லை என்று குறிப்பிட்டார்.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது ஆராயப்பட்டதாகவும் எனினும் இது குறித்து இணக்கப்பாட்டுக்கு தாங்கள் வரவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு, ஜனாதிபதியின் உத்தரவை நிராகரிக்கவும் இல்லை என்று தெரிவித்த அவர், இது குறித்து தொடர்ந்தும் ஆராய்ந்து வருவதாக சுட்டிக்காட்டினார். (அ)

# விமானம் தரையிறங்கும் கட்டணம் குறைக்கப்படும்

கொழும்பு, ஜூன் 08

கட்டுநாயக்க விமான நிலையத்தில் விமானங்கள் தரையிறங்கும் கட்டணத்தை ஒரு வருடத்திற்கு 50 வீதத்தால் குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக துறைமுகங்கள் கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இந்த தீர்மானம் குறித்து விமான நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மத்தள விமான நிலையத்துக்கு அதிகளவு விமானங்களை வரவழைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கமைவாக முதல் நான்கு வருடங்களில் விமான சேவை நிறுவனங்களுக்கு பல சலுகைகள் வழங்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் முதல் ஆண்டில் 100 சதவீதமும் இரண்டாம் ஆண்டில் 50 சதவீதமும் கட்டணத்தைத் தள்ளுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேலும் கூறினார். (அ)

# உள்ளூராட்சிச் சபைகளைக் கட்டுப்படுத்த அரசியல் கைக்கூலிகள் அரசால் நியமனம்

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 08

சுற்றறிக்கைகள் மூலம் அரசியல் கைக்கூலிகளை நியமித்து உள்ளூராட்சி மன்றங்களை தமக்கு விருப்பியவாறு கட்டுப்படுத்த முயற்சித்து வருவதை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றில் சுட்டிக்காட்டினார்.

இந்த சுற்றறிக்கையின் மூலம், உள்ளூராட்சி மன்றங்களின் பணிகளை ஒருங்கிணைப்பதற்கு ஒருங்கிணைப்பாளர் ஒருவரை நியமிக்க, ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் புதிய சபைகளை ஏற்படுத்தாமல் அரசியல் அடியாட்கள் மூலம் உள்ளூராட்சி மன்றங்களைக் கட்டுப்படுத்த தற்போதைய அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சாட்டினார்.

அத்துடன், நீதி நியாயமான நீதிமன்றத் தீர்ப்புகள் வழங்கப்படவேண்டிய நிலையில், விருந்துபசார நிகழ்ச்சிகளை நடத்துவது தார்மீகமல்ல என்றும் சுதந்திரமாக தீர்ப்புகளுக்கு இது இடையூறாக அமையும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.



உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முடியாத பட்சத்தில் ஜனாதிபதி தேர்தலை என்றாலும் நடத்துமாறும், இதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்ளத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் கூறினார்.

# இலங்கை கடற்கரையில் ஒதுங்கிய 8 நாடுகளின் பிளாஸ்ரிக் கழிவுகள்!

கொழும்பு, ஜூன் 08

சீனா, பங்களாதேஷ், இந்தியா, துருக்கி, தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா மற்றும் சீஷெல்ஸ் ஆகிய எட்டு வெவ்வேறு நாடுகளில் இருந்து கடலில் கொட்டப்பட்ட பிளாஸ்ரிக் கழிவுகள் இலங்கையில் கரை ஒதுங்கியுள்ளன.

இரு நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்ட பவளப்பாறை சூழலியல் தொடர்பான சீனா-இலங்கை கூட்டுக் கருத்தரங்கில் விஞ்ஞானி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

பல்வேறு நாடுகளில் இருந்து கடல் நீரோட்டங்கள் மூலம் கடத்தப்படும் கழிவுகள், இலங்கைக் கரையோரத்தில் இருந்து 32 மில்லியன் கிலோ பிளாஸ்ரிக் கழிவுகள் சேகரிக்கப்பட்டுள்ளதாக ருஹூணு பல்கலைக்கழகத்தின் கலாநிதி டெர்னி பிரதீப் குமார தெரிவித்தார். (அ)

# உதிரிப்பாகங்கள் என்ற பெயரில் இறக்குமதி செய்யப்பட்ட சொகுசு வாகனங்கள், அழகுசாதனப்பொருட்கள் சிக்கின!

கொழும்பு, ஜூன் 08

மோட்டார் உதிரி பாகங்கள் என பொய்யாக அறிவித்து வர்த்தகர் ஒருவரால் இறக்குமதி செய்யப்பட்ட 350 மில்லியன் ரூபா பெறுமதியான மூன்று ஹைபிரிட் கார்கள், அழகுசாதனப் பொருட்கள், சட்டவிரோத சிகரெட்டுகள் மற்றும் வெளிநாட்டு மதுபானங்களை ஏற்றிச் சென்ற கொள்கலனை இலங்கை சுங்கம் கைப்பற்றியுள்ளது.



4 கோடி மதிப்புள்ள ஒரு டொயோட்டா ப்ரியஸ் கார் மற்றும் இரண்டு டொயோட்டா அலையன் கார்கள், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் பிரிட்டனில் தயாரிக்கப்பட்ட 18 கோடி மதிப்புள்ள வாசனை திரவியங்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள், வெளிநாட்டு மதுபானம், ஒலிவ் எண்ணெய் மற்றும் வெளிநாட்டு சிகரெட்டுகளும் கைப்பற்றப்பட்டன.

40 அடி கொள்கலனில் சரக்குகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன.

கொழும்பு கோட்டை சைத்தம் தெருவில் உள்ள ஒரு நிறுவன முகவரிக்கு சரக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக சுங்கத்துறை தெரிவித்துள்ளது. (அ)

# போதையில் பஸ் செலுத்திய இருவருக்கு ரூ. 81,000 தண்டம், 6 மாத கடூழியச் சிறை

கொழும்பு, ஜூன் 08

போதைப்பொருள் பயன்படுத்தி விட்டு பேருந்துகளை செலுத்திய இரண்டு தனியார் பேருந்து சாரதிகளுக்கு கொழும்பு போக்குவரத்து நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் 81,000 ரூபா தண்டப்பணமும் ஆறு மாத கடூழிய சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

கொழும்பு மாநகர போக்குவரத்து பொலிஸார் இந்த இரு குற்றவாளிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகளை தாக்கல் செய்திருந்ததுடன், போதைப்பொருட்களை பாவித்துவிட்டு பஸ்களை செலுத்தியதாக அவர்களுக்கு எதிராக குற்றம்சாட்டப்பட்டது.

வதுரகமவைச் சேர்ந்த சந்துன் சம்பத், மினுவாங்கொடையை சேர்ந்த நிஷாந்த பிரதீப் மல்லவாராச்சி ஆகியோருக்கே தண்டனை விதிக் கப்பட்டது.

சாரதிகள் இருவரையும் கைது செய்த பின்னர் சட்ட வைத்திய அதிகாரியிடம் ஆஜர்படுத்தியதாகவும் அறிக்கையின் படி அவர்கள் போதைப்பொருள் பயன்படுத்தியமை உறுதி செய்யப்பட்டதாகவும் பொலிஸார் நீதிமன்றில் அறிவித்திருந்தனர்.

இதன்படி, சந்தேகநபர்கள் இருவரும் அந்தக் குற்றச்சாட்டுக்களை ஒப்புக்கொண்டபோதே, இந்தத் தண்டனைகள் விதிக்கப்பட்டன. (அ)

## காலை...

கஜேந்திரகுமார் எம். பியின் கைதை கண்டித்து கிளிநொச்சி பொலிஸ் நிலையம் முன்பாக அவரின் ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

முன்னதாக, யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்குக்கு கடந்த வெள்ளிக்கிழமை மக்கள் சந்திப்பில் ஈடுபட்டிருந்த கஜேந்திரகுமாருக்கும் சிவில் உடை பொலிஸாருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது. இந்த நிலையில், சிவில் உடை பொலிஸார் தன்னை தாக்கி துப்பாக்கியால் குறிவைத்து அச்சுறுத்தினர் என்று கஜேந்திரகுமார் குற்றஞ் சாட்டியிருந்தார். இந்த சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸ் நிலையத்துக்கு வாக்குமூலம் அளிக்க வருமாறு பொலிஸார் கஜேந்திரகுமாருக்கு அழைப்பு விடுத்தனர். அங்கு அவர் செல்லவில்லை. இந்நிலையில், பாராளுமன்ற அமர்வுக்காக அவர் கொழும்பு சென்றிருந்த வேளை கஜேந்திரகுமாரை பொலிஸார் கைது செய்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கஜேந்திரகுமார்...

சட்டத்துக்கு அப்பால்பட்டவர்கள் என்ற எண்ணத்தில் உள்ளனர். எனவே, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களின் உண்மையான நிலைப் பாட்டை உணர்த்தும் முதுகெலும்பு பொலிஸாருக்கு இருப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொலிஸ், இராணு வத்தின் கடமைகளுக்கு இடையூறு விளைவிப்பது இது முதல் தடவையல்ல - என்றும் கூறினார்.(ஐ)

## சிங்கள...

தலைவர் பணிமனையில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வார்த்தை பிரயோகம் மற்றும் அவர் செயற்பட்ட விதம் என்பவற்றை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால், எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அவர் தனது சிறப்புரிமை மீறப்படுவதாக பாராளுமன்றத்தில் சபாநாயகரிடம் அறிவிக்கவிருந்த சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

ஆனால், ஆளும் தரப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் இதனை விட பாரிய தவறுகளை இழைத்திருந்தாலும் , மிகவும் பாதுகாப்பாக சமூகத்தில் நடமாடிக் கொண்டிருக்கின்றனர். அலி சப்ரி ரஹீம் 3 கிலோ தங்கம் மற்றும் கையடக்க தொலைபேசிகளை கடத்த முற்பட்ட அன் றைய தினத்தில் கூட பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டார்.

700 மில்லியன் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட வேண்டிய இடத்தில் , 7.4 மில்லியன் மாத்திரமே அறவிடப்பட்டுள்ளது. இவ்வாறு சட்ட விரோத செயலில் ஈடுபட்ட ஆளுந்தரப்பு எம்.பி. பாராளுமன்றத்துக்கு வருகின்றார். ஆனால் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட எதிர்க்கட்சி எம். பி. கைது செய்யப்படுகின்றார். இது இனவாத கருத்தல்ல.

பாராளுமன்ற உறுப்பினர்கள் என்பவர்கள் மக்கள் பிரதிநிதிகளாவர். அவர்கள் ஏதேனும் தவறிழைத்தால் சட்டம் அனைவரும் சமமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஆனால் இந்த அரசாங்கத்தில் ஆளும் , எதிர் தரப்பு எம்.பி.க்களுக்கு வெவ்வேறு வகையில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

தெற்கு மக்களுக்கு நாடகமொன்றை அரங்கேற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. சிங்கள - பௌத்த மக்களிடம் வடக்கின் தமிழ் பிரதிநிதியொருவரை கைது செய்துவிட்டோம் எனக் காண்பிக்க முயற்சிக்கிறது. இது தேர்தலை இலக்காகக் கொண்டு அரங்கேற்றப்படும் நாடகமாகும் - என்றார்.

## தமிழரசு...

பேசப்பட்ட விடயங்களில் முன்னேற்றம் காணப்படாத நிலையிலேயே இன்றைய தினமும் சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நெடுந்தீவு...

துறையிலிருந்து கட்டுமான பொருட்களை ஏற்றியவாறு 38 பேருடன் சென்ற படகே இவ்வாறு விபத்துக்குள்ளானது. கடல் அலையின் தாக்கத்தால் படகின் அடிப்பகுதி தரையுடன் மோதியது.

இதில், படகு சேதமடையவே கடல்நீர் படகின் உள்ளே சென்றது. இதையடுத்து படகை செலுத்தியவர்கள் கடற்படையிடம் உதவி கோரினர்.

விரைந்த கடற்படையினர், சிறிய படகுகளின் உதவியுடன் அங்கிருந்தவர்களை பாதுகாப்பாக மீட்டுக் கரைக்கு அனுப்பினர். அத்துடன், படகுடன் அதிலிருந்த பொருட்களையும் பாதிப்பின்றி கரைக்கு கொண்டு வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ- 03)

## பொலிஸாரின்...

கைதுசெய்யப்பட்டுள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை அவ்வாறு கைது செய்யமுடியாது. இதுதொடர்பில் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தீர்ப்பொன்றை வழங்கியுள்ளார் - என்றார். எனவே, அவரை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். இதேபோன்று லக்ஷ்மன் கிரியெல்லவும் கருத்து வெளியிட்டார்.

அவர்களுக்கு பதிலளித்த சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, பொலிஸ் உயர் அதிகாரியும் கஜேந்திர குமார் பொன்னம்பலமும் என்னுடன் கலந்துரையாடினர். கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை நீதிமன்றத்தில் முற்படுத்த உள்ளதாக என்னிடம் பொலிஸ் உயர் அதிகாரி தெரிவித்தார். பொலிஸாரின் கடமைக்கு நாங்கள் இடையூறு விளைவிக்க முடியாது - என்றார். (ஐ)

## டெங்கு...

அதிகரிக்கக் கூடும். எனவே, சகலரும் தமது சுற்றுச்சூழலை மிகவும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் விசேட மருத்துவர் நிமல்கா பன்னிலஹெட்டி தெரிவித்தார்.

அத்தோடு 11 மாவட்டங்களிலுள்ள 67 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் அதியுயர் அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

41,581 டெங்கு நோயாளர்கள் இதுவரையில் இனங்காணப்பட்டுள்ளனர். வாராந்தம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துச் செல்கிறது. இவர்களில் 49 சதவீதமானவர்கள் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர்.

கண்டி, நுவரெலியா, திருகோணமலை, மட்டக்களப்பு, குருணாகல், இரத்தினபுரி, கேகாலை உள்ளிட்ட மாவட்டங்களிலுள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் மாத்திரமே கனிசமானளவு டெங்கு நோயாளர்கள் காணப்படுகின்றனர்.

கடந்த 2 ஆண்டுகளை விட இவ்வாண்டு டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்துள்ளது. அதற்கமைய 67 சுகாதார மருத்துவ பிரிவுகள் அதிக அபாயம் மிக்க மாவட்டங்களாகப் பதிவாகியுள்ளன. கொழும்பு , கம்பஹா, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, காலி, பொலன்னறுவை, கண்டி, யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு உள்ளிட்ட மாவட்டங்களிலேயே குறித்த அதி அபாய வலயங்கள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன - என்றார். (ஐ)

# 15ஆம் திகதி முதல் கடவுச்சீட்டுக்கு இணையவழியில் விண்ணப்பிக்கலாம்!

கொழும்பு, ஜூன் 08

கடவுச்சீட்டுக்கான இணையவழி விண்ணப்பங்களை எதிர்வரும் 15ஆம் திகதி முதல் சமர்ப்பிக்க முடியும் என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பொதுச் சேவைகளை டிஜிற்றல் மயமாக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சியின் ஒரு பகுதியாகவே இணையவழி கடவுச்சீட்டு விண்ணப்ப முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த புதிய செயல்முறையானது கடவுசீட்டு விண்ணப்ப செயல்முறையை நெறிப்படுத்துவதையும், 3 நாட்களுக்குள் விண்ணப்பதாரர்களின் குடியிருப்புகளுக்கு அவற்றை விநியோகிப்பதை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

கடவுச்சீட்டுகளை வினைத்திறனாக வழங்குவதற்கு வசதியாக, நாடளாவிய ரீதியில் உள்ள 50 பிராந்திய செயலகங்கள் தேவையான வசதிகளுடன் தயார் படுத்தப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் தங்களின் விண்ணப்பங்களை அருகிலுள்ள பிராந்திய செயலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் தபால் பொதி சேவையூடாக அவை உரிய நபர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

www.immigration.gov.lk என்ற இணையதளத்திற்குச் சென்று, கடவுசீட்டுக்காக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்ப படிவத்தின் மென்பிரதியை தரவேற்ற முன்னர் , விண்ணப்பதாரர்கள் விரைவுபடுத்தப்பட்ட “3 நாள் சேவையை” விரும்புகிறீர்களா அல்லது நிலையான “02 வார சேவையை” விரும்புகிறீர்களா என்பதைக் குறிப்பிடவேண்டும்.

இதைத் தொடர்ந்து, விண்ணப்பதாரர்கள் கைரேகைகளை வழங்குவதற்காக தங்கள் பிரதேச செயலகத்திற்குச் செல்ல வேண்டும் மற்றும் இலங்கை வங்கி வழங்கும் இணையதள முறைமையின் மூலம் தேவையான கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

வீட்டிலேயே செயல்முறையை நிறைவு செய்ய முடியாதவர்கள், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட புகைப்பட பிடிப்பகத்துக்கு சென்று தேவையான ஆவணங்களைப் பெறவும் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் முடியும்.

பிரதேச செயலகத்துக்கு சென்று கைரேகைகளை வழங்கியதன் பின்னர் இணையத்தளத்தில் பணம் செலுத்துவதில் தனிநபர்கள் சிரமங்களை எதிர்கொண்டால், மாற்றுக் கட்டண வசதிகள் உள்ளன.

அவர்களின் கைரேகைகளை சமர்ப்பித்த பின்னர், பிரதேச செயலகம் இலக்கமொன்றை வழங்கும். அதை இலங்கை வங்கிக்கு வழங்க முடியும். செலுத்த வேண்டிய தொகை பின்னர் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு மாற்றப்படும் என்றார்.

## பல்கலை...

வீசியிருந்தனர்.

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக வளாகம் அருகே நுகேகொடை - விஜயராமை சந்திக்கு அண்மையாக மாணவர்களின் ஆர்ப்பாட்டம் மறிக்கப்பட்டு கலைக்கப்பட்டது.

மகாபொல கொடுப்பனவை அதிகரிக்குமாறும், வாழ்க்கை செலவை குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும், பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை மீளப் பெற வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில், ஆர்ப்பாட்டக்காரர்கள் பல இடங்களுக்குள் பிரவேசிக்க கோட்டை நீதிவான் நீதிமன்றம் தடை விதித்திருந்தது என்பதும் குறிப்பிடத் தக்கது. (ஐ)

## 300பொருட்கள்...

விதிக்கப்பட்டுள்ள பொருட்களின் எண்ணிக்கை 1,216 வரை குறைந்துள்ளது. நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அரசாங்க முன்னெடுத்த தீர்மானங்களால், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்கள் பாதிக்கப்பட்டனர்.

அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்கும் அதேவேளை, அந்நிய செலாவணியை தக்கவைத்துக்கொள்ள புதிய வரி அறிமுகம், வட்டி வீதங்களை உயர்த்துதல் என்பவற்றுடன் இறக்குமதி கட்டுப்பாடு போன்ற நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. இதன் விளைவாக 2022 ஏப்ரல் மாதத்தில் 24.9 மில்லியன் டொலராக இருந்த வெளிநாட்டு பணம் அனுப்பல், இவ்வருடத்தில் 45.4 மில்லியன் டொலராக அதிகரித்தது.

அத்துடன், பணவீக்கமும் 70 சதவீதத்திலிருந்து 25.5 சதவீதம் வரை குறைந்தது. ரூபாவின் பெறுமதியும் 20 சதவீதத்தினால் அதிகரித்தது. உத்தியோகபூர்வ ஒதுக்கம் 3 பில்லியன் வரை உயர்வடைந்தது.

இதன் பிரதிபலன்களை மக்கள் அனுபவித்து வரும் நிலையில், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கு, தமது உற்பத்தியை முன்னெடுக்க தேவையான மூலப்பொருட்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றும் அவர் கூறினார். (ஐ)

## சர்வதேச...

முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். அவர் நீதிமன்றத்துக்கு வெளியே செய்தியாளர்களை சந்தித்தார். அப்போதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், எங்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட தரப்பு பொலிஸ் என்பதால் அந்தத் தரப்பையும் விசாரிக்க வேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கு இருக்கிறது. ஆனால், பொலிஸார் விசாரணைகளை பக்கச் சார்பாக முன்னெடுத்து எங்கள் மீது ஓர் அடக்குமுறையை பிரயோகிக்கும் வகையிலேயே இந்த சம்பவம் கைது நடைபெற்றுள்ளது.

இந்த சம்பவத்தை நாங்கள் மிகத் தெளிவாக நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தி இருக்கின்றோம்.

அந்த அடிப்படையில், இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் உயரதிகாரிகள் மட்டத்திலே இந்த விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் நீதிமன்றில் தெரிவித்திருக்கிறோம் - என்றும் கூறினார். (ஐ)

## மாகாண...

வடக்கு கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதல்வரின் செயலாளர் கலாநிதி கே. விக்னஸ்வரன் ஆகியோர் இந்த கலந்துரையாடலில் பங்கேற்கின்றனர்.

இந்த வரைவை கலாநிதி கே. விக்னேஸ்வரனே தயாரித்திருந்தார்.

இந்த வரைவில், சமத்துவ கட்சி, தமிழ் மக்கள் விடுதலை புலிகள், தமிழர் சமூக ஜனநாய கட்சி உள்ளிட்ட சுமார் 8 கட்சிகள் கையெழுத்திட்டிருந்தன.

இலங்கை தமிழரசு கட்சி, ரெலோ, புளொட், ஈ. பி. டி. பி. உள்ளிட்ட பிரதான கட்சிகள் கையெழுத்திட மறுத்துவிட்டன.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அண்மையில் ஜனாதிபதி பேச்சு நடத்திய போது, இந்த இடைக்கால ஏற்பாடு பற்றி கலந்துரையாடலாமா என ஜனாதிபதி கேட்டார். எனினும், தமிழ் தரப்பினர் இதை அடியோடு மறுத்து விட்டனர்.

இந்த நிலையிலேயே இந்த வரைவு குறித்து பிரதமர் தலைமையிலான குழு பேச்சு நடத்தவுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# கஜேந்திரகுமாரின் கைது தவறானது!

## எதிரணி பிரதம கொறடா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 08

**பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டுள்ளமை தவறாகும் என்று எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.**

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டமை தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிட்ட அவர்,**



"தனது பாதுகாப்புக்கென பொலிஸ் அதிகாரிகளையோ அல்லது அமைச்சரவை பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளையோ வைத்துக் கொள்ளாத அரசியல்வாதிதான் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். சாரதியுடன்தான் அவர் எல்லா இடங்களும் செல்கின்றார். அவர் அமைதியான நபர். இங்குள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு ஐந்து, பத்து பேர் இருக்கின்றனர். வடக்கு பகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தும் அவர் பாதுகாப்பு அதிகாரிகளை வைத்துக்கொள்ளாதவர். சாரதி மட்டுமே உள்ளார். அவரைக் கைது செய்தது தவறு. பாராளுமன்றம் வரும்போது கைது செய்ய முடியாது."-என்றார். (அ)

## டுபாயில் இருந்து கொழும்புக்கு வந்த தாய்க்கும் சேய்க்கும் குரங்கு அம்மை

கொழும்பு, ஜூன் 08

வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு வந்த தாய் மற்றும் குழந்தைக்கு குரங்கு அம்மை பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

டுபாயில் இருந்து வருகை தந்த இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தபோது குரங்கு அம்மை இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

தொற்றுக்குள்ளானவர்கள் தற்போது தேசிய தொற்று நோய்கள் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

இலங்கையின் இறுதியாக 2022 நவம்பரில் டுபாயிலிருந்து வந்த இலங்கையர்களுக்கு குரங்கு அம்மை இருப்பது கண்டறியப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பொலிஸாரினால் கைதான முன்னணியினருக்கு பிணை

யாழ்ப்பாணம், ஜூன் 08

மருதங்கேணியில் பொலிஸார் துப்பாக்கி முனையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரை அச்சுறுத்திய விவகாரத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இருவரும் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் க.சுகாஸ் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சி நீதிமன்றம் இருவரையும் பிணையில் விடுவித்தது.

அடையாளத்தை வெளிப்படுத்தாமல் அடம்பிடித்த பொலிஸாருடனான சச்சரவை ஒளிப்படம் பிடித்த, பொலிஸார் துப்பாக்கியை நீட்டி மிரட்டியதைக் கண்ட இருவரே பொலிஸாரால் பொய்யான வழக்கில் கைது செய்யப்பட்டிருந்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த விவகாரத்தில் சட்டத்தை மீறியது பொலிஸாரே தவிர, தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரோ அல்ல வென்பதை சுட்டிக்காட்டியதாக அவர் குறிப்பிட்டார். (அ)

## யாழ்.- சென்னை விமான சேவையை ஆரம்பித்து நேற்று 100ஆவது சேவை!

யாழ்ப்பாணம், ஜூன் 08

சென்னை மற்றும் யாழ்ப்பாணத்திற்கு இடையேயான அலையன்ஸ் எயார் சேவை ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் 100 ஆவது விமான சேவையை எட்டியுள்ளது.

நூறாவது சேவையை நினைவு கூரும் முகமாக நேற்று பலாலி சர்வதேச விமான நிலையத்தில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். இந்திய துணைத் தூதுவர், பலாலி விமான நிலைய உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.




சென்னையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அலையன்ஸ் எயார் விமான சேவை தொடங்கப்பட்டதில் இருந்து நேற்று வரை 10,500க்கும் மேற்பட்ட பயணிகள் பயணடைந்துள்ளனர். கொரோனா தொற்றுநோய் இடர்காலத்தில் இடைநிறுத்தத் திற்குப் பிறகு விமான சேவை 2022 டிசெம்பர் 12 மீண்டும் தொடங்கியது. (அ)

## கஜேந்திரகுமாரின் கைது பொலிஸாரின் அராஜகம்

### கஜேந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 08

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டதை வன்மையாகக் கண்டிப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

சிவில் உடையில் வந்த நபர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு உயிராபத்தை மேற்கொள்ள எத்தனித்த சந்தர்ப்பத்தில் அப்பட்டமான பொய்களைக் கூறி இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாக செல்வராசா கஜேந்திரன் குற்றம் சாட்டினார்.

பொலிஸாரின் அராஜக நடவடிக்கை குறித்து பாராளுமன்றில் அறிவிக்கவிருந்த நிலையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டுள்ளதாக செல்வராசா கஜேந்திரன் குறிப்பிட்டார். (அ)

## கஜேந்திரகுமார் எம்.பிக்கு மிரட்டல்; இரு பொலிஸார் நேற்று வாக்குமூலம்

யாழ்ப்பாணம், ஜூன் 09

மருதங்கேணியில் பாராளுமன்ற உறுப்பினரை தாக்கியமை தொடர்பில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று நான்கு மணி நேரம் வாக்குமூலம் வழங்கினர்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண காரியாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பில், சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டது.

மேலும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பரீட்சை கடமையில் ஈடுபட்டிருப்பதால் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார். (அ)

## கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் சிறப்புரிமையை பாதுகாக்கவேண்டும்

### சஜித் பிரேமதாஸ சபாநாயகரிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 08

கைது செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அரசியல் கொள்கைகள் தொடர்பில் எமக்கு கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றபோதிலும் பாராளுமன்ற சிறப்புரிமைச் சட்டத்தின் கீழ் பாராளுமன்றச் சபை அமர்வுகளுக்கு வருவதற்கு அவருக்கு உரிமை உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணம் ஏதுவாக இருந்தாலும்,அவருக்கு வரப்பிரசாதங்கள் இருப்பதால் அது குறித்து கவனம் செலுத்துமாறும்,2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை அன்று அப்போது சபாநாயகராக பதவி வகித்த சமல் ராஜபக்‌ஷ, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரைக் கைது செய்யும்போது கடைப்பிடிக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து தெளிவான தீர்மானத்தை வழங்கியுள்ளதாகவும்,அது ஹன்சார்ட்டில் பதிவிடப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

எனவே இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்துமாறும், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் சிறப்புரிமைகளை பாதுகாக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார். (அ)

## பாராளுமன்ற நிதிக்குழுவின் தலைவராக ஹர்ஷ டி சில்வா

கொழும்பு, ஜூன் 08

பாராளுமன்ற பொது நிதிக்குழுவின் தலைவராக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா நேற்று நியமிக்கப்பட்டார்.

பாராளுமன்ற நிதிக்குழு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று பிற்பகல் கூடியது.

இதன்போது பாராளுமன்ற பொது நிதிக்குழுவின் தலைவர் பதவிக்கு கலாநிதி ஹர்ஷ டி சில்வாவின் பெயரை ஜனாதிபதி முன்மொழிந்துள்ளார். இதற்கு நிதிக் குழு உறுப்பினர்கள் ஏகமனதாக ஆதரவு வழங்கியுள்ளது.

நிதிக் குழு நியமிக்கப்பட்டிருந்தாலும் அந்த குழுவுக்குத் தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. தலைவர் பதவி தொடர்பில் இழுபறி நிலை ஏற்பட்டிருந்தது. ஆரம்பத்தில் மயந்த திஸநாயக்க நியமிக்கப்பட்டார். பின்னர் அவர் பதவி விலகினார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.